


கூட்டுச்சேரா மாநாட்டுச் சமயத்தில் வெளிவந்த "இம்மத்" (Himmat) எனும் இந்திய ஆங்கில வார ஏடு "இலங்கை பிளவுபடுமா?" எனும் தலைப்பிட்டு, பிளவுபட்ட இலங்கைப்படம் ஒன்றைத் தனது அட்டையிலும் தாங்கி ஒரு கட்டுரையை வெளியிட்டிருந்தது. குறித்த அட்டைப்படம்தான் மேலே காணப்படுகிறது, கட்டுரையின் தமிழாக்கம் உள்ளே காணலாம்.


# சுதந்திரன்
SUTANTIRAN

விலை சதம் 60 | தொலை பேசி: 23411 | நிறுவியது 1947

வள்ளுவர் ஆண்டு 2007 | ஆவணி 20 | றம்ழான்10 | (5-9-76) ஞாயிறு | புத்தகம் 30, | இதழ் 39


# செத்தவர்கள் பேட்டியளித்தது எப்படி?

## ஏரிக்கரையில் பெரும் பரபரப்பு!

காலைப் பத்திரிகையில் இறந்துபோன சில பெண்களைப் பற்றிய மரண அறிவித்தல்; மாலைப்பத்திரிகையில் பிரதமர் திருமதி பண்டாரநாயகாவின் திறமையைப் பாராட்டி செத்ததாக விளம்பரப்படுத்தப்பட்டவர்களின் பெயரில் சிறப்புப் பேட்டி; செத்தவர்கள் எழுந்துவந்து எப்படிப் பேட்டி அளித்தார்கள்? பிரதமரை அவமதிப்பதற்காக அரசாங்க நிறுவனமான ஏரிக்கரைக்குள்ளேயே திட்டமிட்டு செய்யப்பட்ட சதியா இது? என்பன போன்ற பரபரப்பான கேள்விகள் "ஹேக்ஹவுஸ்" வட்டாரத்தில் எழுந்துள்ளன.

இதுசம்பந்தமான விசாரணையின் பொருட்டு 'சண்டே ஒப்சேவரின்' பிரதம ஆசிரியர் திரு. மேர்வின் டீ சில்வாவும், 'சிலோன் நியூஸ்' ஆசிரியர் திரு. பிலிப் கூரேயும் 'லேக் ஹவுஸ்' நிர்வாகத்தினால் கட்டாய விடுமுறையில் அனுப்பப்பட்டுள்ளனர். அதேசமயம் குறித்த பிரச்சினைக்குரிய செய்தியை எழுதிய பத்திரிகையாளர் வேலையிலிருந்து உடனடியாக நீக்கப்பட்டுவிட்டதாக அறியவருகிறது.

ஏரிக்கரையின் காலை ஆங்கில ஏடான டெயிலி நியூசின் 23-8-76 இதழில் திருமதி

—8-ம் பக்கம் பார்க்க

# காற்றில் பறந்தது வாக்குறுதி

# இளைஞர்கள் விடுதலைசெய்யப்படவில்லை!

## தீவிர நடவடிக்கைக்கு கூட்டணியின் அனுமதியைக் கோருகிறார்கள் இளைஞர்கள்!

கூட்டுச் சேரா நாடுகளின் உச்சி மாநாடு முடிவடைந்ததும் ஆகஸ்ட் 31-க் கிடையில் விசாரணையின்றி சிறைவைக்கப்பட்டிருக்கும் தமிழ் இளைஞர்கள் விடுதலைசெய்யப்படுவார்கள் என்றும், இது தொண்ணூற்றைன்பது வீதம் நிச்சயமானதென்றும் பிரதமர் சார்பில் சிறைச்சாலையில் உண்ணாவிரதப் போராட்டத்தை நடத்திய குழுவினருக்கு சிறைச்சாலை ஆணையாளர் ஆகஸ்ட் நடுப்பகுதியில் கொடுத்திருந்த வாக்குறுதி காற்றில் பறந்தது. கொடுக்கப்பட்ட வாக்குறுதிப்படி இளைஞர் எவரும் இதுவரை விடுதலை செய்யப்படவில்லை!

உண்ணாவிரதமிருந்த இளைஞர்களுக்கு அளிக்கப்பட்ட வாக்குறுதி காற்றில் பறக்க விடப்பட்டதை தொடர்ந்து தமிழ் ஈழத்தில் எதிர்ப்பு நடவடிக்கைகளைத் தீவிரப் படுத்துவதற்கு தமிழ் இளைஞர்பேரவை தமிழர் விடுதலைக் கூட்டணியின் அனுமதியைக்கோரியிருக்கிறது.

தம்மை விடுதலைசெய்ய வேண்டும் அல்லது நீதி விசாரணைக்குட்படுத்த வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்து பிரதமருக்கு முன்னறிவித்தல் கொடுத்துவிட்டு, சிறையிருக்கும் தமிழ் இளைஞர்கள் ஆகஸ்ட் 5ம் திகதி உண்ணாவிரதத்தை ஆரம்பித்தது தெரிந்ததே.

உண்ணாவிரதத்தை இளைஞர்கள் நாட்டின் பல்வேறு

—8-ம் பக்கம் பார்க்க

### சிலை செய்தவர் மரணம்!

காலஞ்சென்ற யாழ் மேயர் துரையப்பாவின் சிலையை வார்க்க உதவியவர்களில் ஒருவரும் சிற்பியுமான குருநகர் வாசி ஒருவர், துரையப்பாவின் வீட்டில் வைத்து சிலை செய்துகொண்டிருக்கும்போது துருப்பிடித்த ஆணி காலில் குத்தியதால் ஏற்புவலி கண்டு மரணமானார். இவரது ஏழைக்குடும்பம் இன்று நடுத்தெருவில் நிற்கிறதாம்.

# பொலிசாரே குற்றவாளிகள்!

## பருத்தித்துறை வழக்கில் தீர்ப்பு

பருத்தித்துறையைச் சேர்ந்த முருகேசு நடராசலிங்கம் என்பவரைத் தாக்கியதாகவும் பருத்தித்துறை நகரசபைக்கு சொந்தமான ரூபா 2000 பெறுமதியான மின்சார உபகரணங்களுக்கு சேதம் விளைவித்ததாகவும குற்றஞ்சாட்டி பொலீஸ் சப் இன்ஸ்பெக்டர் டி. எஸ. எஸ். ஹூரகொட, பொலிஸ் கான்ஸ்டபிள் டபிள்யூ. சே. சோமரத்தின ஆகியோருக்கு எதிராக தொடரப்பட்டிருந்த வழக்கு விசாரணையின் முடிவில் எதிரிகளான பொலிசார் குற்றவாளிகளே என யாழ் நீதவான் திரு. கே. ஞானச்சந்திரன் 2-9-76ல் பருத்தித்துறை நீதிமன்றத்தில் வைத்துத் தீர்ப்பளித்தார்.

பீனல்கோட் 314, 323, 187 செக்சன்களின்படி எதி

—4-ம் பக்கம் பார்க்க

# 7 இளைஞர்களுக்கு எதிரான வழக்கு 7-ந் திகதி ஆரம்பம்!

## எதிரிகள் சார்பில் கூட்டணி சட்டத்தரணிகள் ஆஜராவர்!

துரையப்பா கொலையுடன் சம்பந்தப்படுத்தி தமிழ் இளைஞர்கள் ஏழு பேருக்கு எதிராக அவசரகாலச் சட்டத்தின் கீழ் ஜூரர்களற்ற (ட்ரயல்—அற்பார்) நீதிபதிகள் குழாம் முன்னர் அரசு தொடர்ந்துள்ள வழக்கு எதிர்வரும் 7-9-76 செவ்வாய்க்கிழமை ஆரம்பமாகவிருக்கிறது.

கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி திரு. மொரிஸ் பெரேரா அவிசாவலை, மேல் நீதிமன்ற நீதிபதி திரு. பரிந்தா ரணசிங்கா, அனுராதபுரம் மேல் நீதிமன்ற நீதிபதி திரு. சி. எல் டி. மூனமலை ஆகியோரைக் கொண்ட 'ட்ரயல்-அற் பார் நீதிமன்றத்தில் இந்த விசாரணை நடைபெறவிருக்கிறது.

பி. கலாபதி, வீ. ஏ. கிருபாகரன், எஸ். லோகநாதன், வி. ஸ்ரீ தரன், ரி. சந்ததியார், இன்பம் அல்லது கே. விஸ்வஜோதி, இரத்தினம், எஸ். செல்வக்குமார் ஆகிய இளைஞர்களே இவ்வழக்கில் குற்றம் சுமத்தப்பட்டோராவர். பி. கலாபதி வீ. ஏ. கிருபாகரன் ஆகியோர் மீது கொலைக்குற்றமும் ஏனை

—8-ம் பக்கம் பார்க்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ் ஈழத்தேசிய இனத்தின் விடுதலைக் குரல்

# "மாற்றுத்திட்டமாக இருந்த 'தனிநாடு' கொள்கை இன்று மாற்றமுடியாத திட்டமாகிவிட்டது!"

## தமிழ் இளைஞர்கள் தீவிரவாதத்தையே நாடுகிறார்கள்!

**மகாத்மா காந்தியின் பேரனான ராஜ்மோகன் காந்தியை பிரதம ஆசிரியராக கொண்டு பம்பாயிலிருந்து வெளிவரும் ஆங்கில வார ஏடு 'இம்மத்' (HIMMAT) அந்த இதழின் சிறப்பு நிருபர் விஜிதா யாப்பா, அண்மையில் யாழ்ப்பாணம் சென்று அங்குள்ள அரசியல் நிலைமைகளை ஆராய்ந்ததோடு, தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர் தந்தை செல்வா, செயல் அதிபர் நாவலர் அமிர்தலிங்கம், பொருளாளர் சி. கதிரவேற்பிள்ளை ஆகியோரைப் பேட்டியும் கண்டார். அவற்றை ஆகஸ்ட் 6ம் திகதிய (6-8-76) 'இம்மத்' ஏட்டில் எழுதியுள்ளார். அதை இங்கு தமிழாக்கித்தருகிறோம்: -ஆர்.**

தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைமைச் செயலகமும் தலைநகரமுமான யாழ்ப்பாணத்துக்கு அண்மையில் விஜயம் செய்திருந்தேன். தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர்களை — அவர்களது கார்களில் பறந்து கொண்டிருக்கும் உதயசூரியன் கொடிகளிலிருந்து சுலபமாக அடையாளம் கண்டு கொள்ளலாம்.

யாழ்ப்பாணம் மிகவும் அமைதியாகவும் பரபரப்பின்றியும் மோதல்களுக்கான அடையாளமேதுமின்றியும் காட்சியளித்தது.

இருந்தபோதிலும், சிறீலங்காவின் குடியரசு தினமான 1976 மே 22ம் திகதி, அரசியல் சட்டத்துக்கு விரோதமாகவும், பிரிவினைக்கு ஆதரவாகவும் துண்டுப்பிரசுரங்கள் விநியோகித்ததற்காக தமிழர் விடுதலைக்கூட்டணியின் நான்கு முக்கிய தலைவர்கள் மீது அவசரகாலச்சட்டத்தின் கீழ் கொழும்பில் விசாரணை நடைபெறுவதை நான் மறக்கவில்லை. இவ்வழக்கில் சம்பந்தப்பட்டுள்ள நான்கு தமிழ்த் தலைவர்களும் குற்றவாளிகளாகக் காணப்படுவார்களானால் இவர்கள் சிறைக்கனுப்பப்படுவதுமன்றி இவர்களது சொத்துக்களும் அரசாங்கத்தினால் பறிமுதல் செய்யப்படும்.

### பிரச்சினையின் பின்னணி

இப்போது இலங்கையில் ஏற்பட்டிருக்கும் இனப்பிரச்சினைபற்றி அறிவதற்கு சில பின்னணி உண்மைகளை அறியவேண்டியது அவசியமாகும். இலங்கையில் வாழும் 130 இலட்சம் மக்களில் 90 இலட்சம் பேர் சிங்களவர்கள்; 30 இலட்சம் பேர் தமிழர்கள் சிறுபான்மையினமான தமிழர்கள் பிரதானமாக வடக்கு கிழக்கு மாகாணங்களில் வாழ்ந்துவருகிறார்கள். தமிழரசுக்கட்சியின் தலைமையின் கீழ் தமிழ்பேசும் மக்கள் கடந்த 20 ஆண்டுகளாக சமஷ்டி அரசியலமைப்பு கோரி கிளர்ச்சிசெய்து வந்தார்கள். இப்போது அவர்கள் தனிநாடு கோரிக் கிளர்ச்சி செய்கிறார்கள்.

### சிங்களவர்களின் அச்சம்

மூன்று சிங்களவருக்கு ஒரு தமிழர் வீதம் நாட்டின் இனவாரித்தொகை அமைந்திருந்தபோதிலும், இந்தியாவிலிருக்கும் மூன்றரைக் கோடி தமிழர்களுடைய எண்ணிக்கை பலத்தை எண்ணிப்பார்த்து சிங்களவர்கள் பயப்படுகிறார்கள். (இந்தியாவுக்கும் இலங்கைக்குமிடையேயுள்ள தூரம் ஆக22 மைல்கள் தாம்) இலங்கையிலுள்ள தமிழர்களின் அபிலாஷைகள் மீது திராவிட முன்னேற்றக்கழகம் அனுதாபத்துடனிருந்து வருகிறது. இந்தியர்கள் அனைவருமே தமிழர்கள் எனப் படித்த சிங்களவர்கள்கூட நினைத்திருப்பதால் இந்தச் சிக்கல் இன்னும் இறுகி வருகிறது.

தமிழர் ஆதிக்கம் பற்றிய அச்சம் வரலாற்றில் ஆழமாகப்பதிந்து கிடக்கிறது. கி. பி. 600ம் ஆண்டிலிருந்து, தென்னிந்தய அரசர்களின் படையெடுப்புக்கு இலங்கை உள்ளாகி வந்திருக்கிறது. 2500 வருட சிங்கள சரித்திரத்தில் தமிழர்களே எதிரிகளாக இருந்துவந்திருக்கிறார்கள். இரு இனங்களும் இந்தியாவிலிருந்து வந்து குடியேறிய போதிலும்—தமிழர்கள் திராவிடவழிதோன்றல்களாகவும் சிங்களவர்கள் வட இந்தியாவிலிருந்து வந்த ஆரியர்களாகவும் கருதப்படுகின்றனர். இலங்கையில் மட்டுமே சிங்களம் பேசப்படுவதால் அதை மிகுந்த அக்கறையுடன் சிங்களவர்கள் பாதுகாக்க முயல்கிறார்கள். இதனால்தான் பெரும் சிக்கல் ஏற்படுகிறது.

### தமிழர் விடுதலைக் கூட்டணி உருவாகியது

1970ம் ஆண்டு திருமதி சிறிமாவோ பண்டாரநாயகாவின் ஆட்சியேற்பட்டதற்குப்பின்னர், தமிழர்களுக்கும் சிங்களவர்களுக்குமிடையே இருந்து வந்த பிளவு, விரிசலடைந்து வந்துள்ளது. 1972ம் ஆண்டு புதிய அரசியலமைப்புத்திட்டம் உருவாக்கப்பட்டது. சில உரிமைகளையும் பாதுகாப்புக்களையும் கோரி தமிழர்கள் முன்வைத்திருந்த கோரிக்கைகள் புறக்கணிக்கப்பட்டன. தமிழரசுக் கட்சி பாராளுமன்ற உறுப்பினர்கள் அரசியல் நிர்ணய சபையைவிட்டு வெளிநடப்புச் செய்தனர். அவர்கள் தமிழர் கூட்டணியை அமைத்து அஹிம்சைப்போராட்டங்களை நடாத்தித்தொடங்கினார்கள். பிரச்சினைகளை பேச்சுவார்த்தைகள் மூலம் தீர்ப்பதற்கு அவர்கள் எடுத்து வந்த முயற்சிகள் அரசாங்கத்தின் பிடிவாதத்தினால் பயனற்றுப்போயின. சில கிழமைகளுக்கு முன்புதான் தமிழர் விடுதலை கோரும் தமிழர் விடுதலைக் கூட்டணியாக தமிழர் கூட்டணியின் பெயரும் மாற்றியமைக்கப்பட்டது.

### தமிழர் போராட்டம்

24 மணி நேரத்தில் சிங்களத்தை அரசாங்க மொழியாக்குவேன் என்று கூறியதன்மூலம் 1956ம் ஆண்டு திரு. எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயகா வகுப்புவாத வெள்ளத்தை உடைத்துவிடுவதற்கு முன்னர், இரு மொழிகளும் (தமிழும், சிங்களமும்) அரசாங்க மொழிகளாக ஏற்கப்பட்டிருந்தன. சிங்களம்மட்டும்சட்டத்தைத் தொடர்ந்து, தமிழர்கள் சமஅந்தஸ்து கோரியதுடன், சிங்களத்தைப்படிக்கவேண்டாமென்றும் சிங்களத்தில் வேலைசெய்ய வேண்டாமென்றும் தமிழர்கள் மத்தியில் எடுத்துக்கூறப்பட்டது. தமிழர்களின் உரிமைகளை வென்றெடுப்பதற்கு சட்டமறுப்புப் போராட்டங்களை நடத்தினார்கள். 1958ம் ஆண்டு நாட்டில் பயங்கர இனக்கலவரம் ஏற்பட்டது. அதன்பின்னர் இனங்களுக்கிடையேயான உறவு சீர்திருந்தவில்லை.

ஆங்கிலத்துக்குப் பதிலாக சிங்களத்தில் பிள்ளைகளுக்கு கல்வி புகட்டியதன்மூலம் இந்தப் பிளவு மேலும் வளர்ந்தது. தமிழர்களில் பலர் தேவை காரணமாக சிங்களத்தைப் படித்துள்ளபோதிலும், சிங்களவர்களில் மிகச் சிலருக்கே தமிழ் பேசத்தெரியும். சிங்களத்தைப் படிக்க மறுத்த தமிழர்கள் பலர் அரசாங்க வேலைகளிலிருந்து இளைப்பாறினார்கள். அரசாங்க சேவையில் தமிழர் வகித்துவந்த அதிகாரம் குறைந்தது.

### சிறீமாவோ முயற்சி

திருமதி பண்டாரநாயகா 1970 யூலை மாதம் பிரதமராகப் பதவிக்கு வந்தார். ஆனால் 1974 அக்டோபரில்தான் அவர் கொழும்பிலிருந்து 250 மைல் தொலைவிலுள்ள யாழ்ப்பாணததுக்கு தனது முதலாவது விஜயத்தை மேற்கொண்டார். தனது விஜயத்தைப் பயன்படுத்தி தமிழ்த் தலைவர்களின் ஆதரவைத் திரட்டுவதற்குப் பதிலாக, திருமதி பண்டாரநாயகா வகுப்புவாத அரசியல் ஆபத்து பற்றி பிரசங்கம் செய்தார். தமிழ்த்தலைவர்கள் அரசியல் அதிகார வெறிபிடித்தவர்கள் என்றும், உணர்ச்சி வசப்பட்டவர்கள் என்றும் சாடினார். தமிழர் கூட்டணித் தலைமைக்கு போட்டியாக மாற்றுத் தலைமை ஒன்றை தமிழர்களிடையே உருவாக்க அவர் கையாண்ட 'இராசதந்திரம்' இதுதான்!

### அமிர்தலிங்கத்துடன் 3 மணி நேரம்

அண்மைய எனது விஜயத்தின்போது 48 வயது நிரம்பிய தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயல் அதிபர் திரு. அ. அமிர்தலிங்கம் அவர்களோடு 3 மணி நேரம் பேசினேன். அவர் தமிழரசுக்கட்சியின் தலைவராகவும் விளங்குகிறார். தமிழரசுக் கட்சி தமிழர் விடுதலைக்கூட்டணியிலுள்ள மிகவும் சக்தி வாய்ந்த ஓர் உறுப்புக்கட்சியாகும். தமிழர் கோரிக்கைகள் பற்றி திரு. அமிர்தலிங்கம் உணர்ச்சிவசமாக எடுத்து விளக்கப்படுத்திக் கொண்டிருந்தபோது அந்த வெம்மையை அங்கு சுழன்று கொண்டிருந்த காற்றாடியாலும் குளுமைப்படுத்த முடியவில்லை.

### காங்கேசன்துறை தேர்தல்

பொலிசாருடன் மோதல் பற்றிப் பேசியபோது கூட தனதுமுகத்தில்புன்முறுவலுடன்காணப்பட்டதிரு. அமிர்தலிங்கம் பின்வருமாறு கூறினார். — "இப்போதைய போராட்டம், 1972 யூன் மாதம்தான் ஆரம்பமாகியது. நாங்கள் ஆறு அம்சக் கோரிக்கையொன்றை முன்வைத்திருந்தோம். அரசாங்கத்துக்கு மூன்று மாதத் தவணை கொடுத்தோம். இந்த மூன்று மாத அவகாசம் எம்முடன் அரசு பேச்சுவார்த்தையை ஆரம்பிப்பதற்கு போதுமானதாக இருக்குமென்று கருதினோம், ஆனால் நாங்கள் அரசாங்கத்தினால் அவமதிக்கப்பட்டோம்; விரக்தியின் விளிம்புக்குத் தள்ளப்பட்டோம்; ஒன்றுமே நடைபெறாததைக் கண்ட நாம், தமிழ் மக்களின் கருத்தை அரசு அறிவதற்கு ஒருவாய்ப்பு ஏற்படுத்திக் கொடுக்கவேண்டுமென்று கருதினோம். அதனால் எங்கள் தலைவர் திரு. செல்வநாயகம் தனது காங்கேசன்துறை பாராளுமன்ற உறுப்பினர் பதவியை 1972 அக்டோபர் மாதம் துறந்தார். இரண்டரை ஆண்டுகாலம் இடைத்தேர்தலை நடத்துவதற்கு அரசாங்கம் மறுத்தது. ஆனால் தேர்தல் நடைபெற்றபோது 36,000 வாக்குகளில் 26,000 வாக்குகள் திரு. செல்வநாயகத்துக்கே கிடைத்தது." என்றார் அமிர்தலிங்கம்.

## 'இம்மத்' ஏட்டுக்கு செல்வா, அமிர் அளித்த பேட்டி

### செல்வாவின் கூற்று

பிரிவினை இயக்கத்தின் முதிர்ச்சியுற்ற தலைவர் திரு. செல்வநாயகம் பின்வருமாறு கூறுகிறார்:- அரசாங்கத்தின் பாரபட்சமான புறக்கணிப்பு நடவடிக்கைகள்தாம் பிரிவினைக் கருத்துக்கள் வளர்வதற்கு உதவி செய்தது. இவ்வளவு காலமும் ஒரு 'மாற்றுத் தீர்வாக' கருதப்பட்டு வந்த தனிநாடு கொள்கை — இப்போது மாற்றமுடியாத "ஒரே தீர்வாக" மாறிவிட்டது.

### தனிநாடு கொள்கை தோன்றக் காரணம்

தனிநாடு கொள்கையை எந்தக் கட்டத்தில் திரு. அமிர்தலிங்கம் ஏற்றுக் கொண்டார் என்று அவரிடம் கேட்டபோது திரு. அமிர்தலிங்கம் பின்வருமாறு கூறினார்:-

"கடைசிச்சம்பவம் 1974ம் ஆண்டு சனவரியில் நடைபெற்றது. யாழ்ப்பாணத்தில் அனைத்துலக தமிழாராய்ச்சி மாநாட்டை நாம் நடத்துவதை அரசாங்கம் ஆட்சேபித்தது. கொழும்பில்தான் மாநாட்டை நடத்த வேண்டுமென்று அரசு சட்டம் போட்டது. வெளிநாட்டுப்பேராளர்களுக்கு நுழைவாணை வழங்கமறுத்தது. கடைசி நேரத்தில் யாழ்ப்பாணத்தில் நடத்த அனுமதித்தார்கள். ஆனால் மாநாட்டு இறுதிநாளான சனவரி 10ம் திகதி யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற மாபெரும் பொதுக்கூட்டத்தில்பொலிசார் காரணமற்ற வன்முறையை பிரயோகித்தனர். இதன்பயனாக ஒன்பது பேர் உயிரிழந்தனர். இது பற்றி விசாரிக்க ஒரு விசாரணைக் கமிஷனை நியமிக்கும்படிகேட்டோம். அதற்கும் அரசு மறுத்துவிட்டது. இதன் பின்னர் குடிமக்கள் தாமாகவே ஒரு விசாரணைக் கமிஷனை ஏற்பாடு செய்தார்கள். அதன் பின்னர்தான் சுதந்திரம் பெறுவதே பிரச்சினைகளுக்கு தீர்வுகான ஒரேவழியென்ற முடிவுக்கு வந்தோம்."

### கொள்கைப்பிரகடனம்

தமிழ் ஈழநாட்டை உருவாக்கும் தமிழர் விடுதலைக் கூட்டணியின் தீர்மானப் பண்ணாகத்தில் 1976 மே 14ல் நடைபெற்ற கூட்டணியின் மாநாட்டிலேதான் ஏற்றுக்கொள்ளப்பட்டது. (பிரபல கல்விமானும், கூட்டணியின் ஆரம்ப உறுப்பினருமான திரு. கே. நேசையா மட்டுமே இதை எதிர்த்தார்) தமிழர்களுக்கு தனிநாடு வேண்டுமென்றுகோரி ஒரு வாரத்துக்கு சுவரொட்டிகளையும் பிரசுரங்களையும் வெளியிடுவதென்று யூலை

—7-ம் பக்கம் பார்க்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செத்துப் பிழைத்த

**அன்பு நண்பா,**

நாலாறு நாட்கள் நம் இதயத்தை கப்பிக் கொண்டிருந்த மாபெரிய வேதனை — ஓரளவு தீர்ந்துவிட்டது; உள்ளத்தைக் கப்பியிருந்த ஏக்கம், ஓரளவு தவிர்க்கப்பட்டுவிட்டது; வாராது வந்துற்ற இயக்கக் கண்மணிகளை இழந்திடுவோமோ—மாற்றாரின் சிறைக் கூடங்களில் பிணமாகப்பார்த்திடுவோமோ — என்று பதைபதைத்து அழுது அரற்றிக்கொண்டிருந்த மனத்திற்கு சற்று ஆறுதல் கிடைத்துவிட்டது; உண்ணும்போது உண்ணமனமின்றி— உறங்கும்வேளையில் உறங்கமனமின்றி தவித்துக்கொண்டிருந்த இதயங்களுக்கு சற்று ஆறுதல் கிடைத்துவிட்டது!

ஆம நண்பா, 24 நாட்கள்சிங்களச் சிறைச்சாலைகளில் தொடர்ச்சியாக நீடித்த நம்முடைய உடன்பிறப்புக்களின் உண்ணாவிரதம், மூதறிஞர் தந்தை செல்வாவின் அன்புக்கட்டளைப்படி கைவிடப்பட்டது என்கிற செய்தி தான் நம்மைச் சற்று ஆறுதலடையச்செய்திருக்கிறது. நன்றாகக் கவனி நண்பா, உள்ளத்துக்கு ஓரளவு ஆறுதல் கிடைத்திருக்கிறது என்றுதான் குறிப்பிட்டிருக்கிறேனே தவிர — இத்துடன் நாம் திருப்தியடைந்து, நிம்மதிப் பெருமூச்சுடன் எல்லாம் தீர்ந்தது என்று கூறி சும்மா உட்கார்ந்திருக்க முடியாது; சிறையில் வாடும் தமிழ் இளைஞர்களை வெளியே எடுக்கும் வரை நம்முடைய இனத்தின் விடுதலையைப் பெறும்வரை நமக்கு நிரந்தர நிம்மதியோ— பூரண திருப்தியோ ஏற்படவே முடியாது!

சிங்கள அரசின் சிறையதிகாரிகளின் அடக்குமுறைக்கும் அச்சுறுத்தல்களுக்கும், ஆணவப்போக்குக்கும் துன்புறுத்தல்களுக்கும் கிஞ்சிற்றும் அஞ்சாது அடங்காது, பணியாது. ஆண்மை வீரர்களாய் சிறையில் சத்தியப் போர் நிகழ்த்திவந்த தமிழீழ விடுதலை வீரர்கள் — தானைத் தலைவன் தமிழ் ஈழத்தின் முதல்வர்—மூதறிஞர் செல்வாவின் அன்புக் கட்டளைக்குப் பணிந்து உண்ணாவிரதத்தைக் கைவிட முடிவு எடுத்ததன் மூலம் தமது கட்டுக்கோப்பையும் இயக்க விசுவாசத்தையும் தந்தையின் மீது தாம கொண்டிருக்கும் அளவிடற்கரிய பெருமதிப்பையும் சிங்கள அரசுக்கும் உலகிற்கும் எடுத்துக்காட்டிவிட்டனர்!

ஆம நண்பா, ஆகஸ்ட் 31ம் நாளிலிருந்து நீராகாரத்தையும் நிறுத்தி—பரிபூரண உண்ணாவிரதத்தை மீண்டும் ஆரம்பிப்பதற்கு உறுதி பூண்டிருந்த தமிழ் இளைஞர்களிடம், மூதறிஞர்செல்வாவின் பாசக்கடிதத்தைக்கொடுத்து —மண்டியிட்டு வணங்கித்தான் உண்ணாவிரதத்தை ஒரு முடிவுக்கு கொண்டுவர சிறை ஆணையாளரினல் முடிந்தது என்கிற செய்தி— நமது விடுதலை வரலாற்றில் இடம்பெறப் போகின்ற நிகழ்ச்சியாகும்!

அடக்கு முறை பலிக்கவில்லை!
அச்சுறுத்தல் பயன தரவில்லை!
தனிமைச் சிறை தளர்ச்சி தரவில்லை!
அடி, உதையால் வெல்ல முடியவில்லை!
பலவந்த உணவூட்டல் (Forcible Feeding) பலிதமாகவில்லை!
பொய்ப்பிரசாரம புஸ்வாணமாயிற்று!
போலி வாக்குறுதிகளால் ஏமாற்ற
முடியவில்லை!

இறுதியில், எந்தத் தலைவனின் வார்த்தையை வேதமந்திரமாக இந்நாட்டுத் தமிழ் இனம் ஏற்றுக்கொண்டிருக்கிறதோ —எந்தத் தலைவனின் சுட்டுவிரலசைவுக்கு 35 இலட்சம் தமிழ் பேசும் இதயங்கள் கட்டுப்படுகின்றனவோ—அந்தத் தலைவன் மூதறிஞர் செல்வா கண்ணீரில் வரைந்திருந்த கடிதத்தைக் காட்டித்தான் தமிழ் இளைஞர்கள் மேற்கொண்டிருந்த சாகும்வரை உண்ணாவிரதத்தை ஒரு முடிவுக்கொண்டு வந்து தம்மீது விழவிருந்த மாபெரும் பழியிலிருந்து சிங்கள அரசு தப்பித்துக்கொண்டது என்பதை வரலாறு குறித்துக் கொண்டிருக்கிறது!

உயிர்ப்பலி தராமல் விடுதலைத் தெய்வத்தை எந்த நாடும் எந்த இனமும் எந்த மக்களும் நெருங்க முடியாதென்பது உண்மைதான்! ஆனல் விடுதலைப் போராட்டத்தை தலைமை தாங்கி முன்னின்று நடத்தக்கூடிய ஆற்றல் வாய்ந்த வீரர்கள முதலிலேயே களபலியாகி விட்டால் — விடுதலைச் சேனை தக்க தளபதிகளின்றி தறிகெட்டுச் சிதறிவிடுமன்றோ? அதனால்தான் சிறையில் இருக்கும் விடுதலை வீரர்கள் —இயக்கத்தை முன்னெடுத்துச் செல்லக்கூடிய ஆற்றல் வாய்ந்தோர்— உண்ணாவிரதமிருந்து உயிர் விடுவதை எப்படியாவது தடுத்து நிறுத்திட வேண்டுமென்று நம்மில் பலர் துடித்தோம்; இறுதியில் மூதறிஞரின் கண்ணீரில் தோய்ந்த கடிதம் அக்காரியத்தை நிறைவேற்றி வைத்துவிட்டது!

**"உங்களில் எவராவது உயிர் இழப்பதை என்னல் தாங்கமுடியாது; நீங்கள் சமுதாயத்துக்கு தேவைப்பட்டவர்கள்; தமிழினத்தை எதிர்காலத்தில் வழி நடத்த வேண்டியவர்கள்!"** என்று மூதறிஞர் செல்வா தமது கடிதத்தில் உண்ணாவிரத தலைமைக் குழுவுக்கு எழுதியிருப்பது நிறைந்த அர்த்தபுஷ்டியுள்ளது; இக்கடிதத்தின் மூலம், வருங்காலத்தில் விடுதலை இயக்கத்தை வழி நடத்திச் செல்லக்கூடிய ஆற்றலும், தகுதியும் தியாக உணர்வும், சிறையில் வாடும் இளைஞர்களுக்கு உண்டு; அவர்கள் மத்தியிலிருந்துதான்

# தியாகச் சுடர்கள்!

புதிய தலைவர்கள் உருவாகப் போகிருர்கள் என்பதையே தந்தை செல்வா மிகவும் தீர்க்க தரிசனத்துடன் சூசகமாகக் குறிப்பிட்டிருக்கிருர்!

நண்பா, தமிழர் விடுதலைக்கூட்டணியின் தலைவரும் —தமிழ் ஈழ முதல்வருமான தந்தை செல்வா அவர்கள் ஒருவரது ஆணைக்கே தமிழ்க் குலம் கட்டுப்படும்—வேறுயாருடைய ஆணைக்கும் கட்டுப்படாது; தந்தை சொல்மிக்க மந்திரமில்லையென்பது தமிழ் இளைஞர்களின் அரசியற் பால பாடம் என்பதை வெறிபிடித்த சிங்கள அரசுக்கு எடுத்துக் கூறுவதுபோல— தந்தை செல்வாவின் ஆணையின் பேரில்—அன்புக்கட்டளையின்பேரில் உண்ணாவிரதத்தை ஆகஸ்ட் 29ம் நாளிலிருந்து கைவிடுவதென்று சிறையிருக்கும் தமிழ் இளைஞர்கள்எடுத்த முடிவுஇயக்கத்துக்கும் இனத்துக்கும் பெருமையளிக்கின்ற முடிவாகும்!

எனினும் நண்பா. 1976 ஆகஸ்ட் 5ம் நாளிலிருந்து ஆகஸ்ட் 28 வரை இருபத்திநன்கு நாட்கள் தமிழ் இளைஞர்கள் சிறைச்சாலையில் மேற்கொண்டிருந்த உண்ணாவிரதத்தினல் தமிழ் சமுதாயத்துக்கு ஏற்பட்ட எழுச்சியும், விளைவுகள், பயன்களும் மிகப்பல! அதுவும் கூட்டுச்சேரா மாநாட்டுக்கு நூற்றுக்கணக்கான வெளிநாட்டுத்தலைவர்களும் பிரதிநிதிகளும் பத்திரிகையாளர்களும் நாட்டில் குவிந்திருந்த நேரத்தில் இந்த உண்ணாவிரதம் திட்டமிட்டு நடத்தப்பட்டதால் சிங்கள அரசு கடைப்பிடித்துவரும் இனவெறிக்கொள்கை

## அரசியல் மேடை

அது போட்டிருந்த இரும்புத்திரைக்கும் மேலாக ஓரளவு உலகத்துக்கு தெரிகின்ற வாய்ப்பு ஏற்பட்டு விட்டது!

துணிச்சலும், திடமானமும் தியாக உள்ளமும் இருந்திடின, வெளியிலிருந்துமட்டுமல்ல —வெஞ்சிறையிலிருந்திடினும் அறத்தின் துணைகொண்டு நீதிக்காக போராடிட முடியும் என்பதை விடுதலை வீரர்களின் உண்ணாவிரதப் போராட்டம் எடுத்துக்காட்டிவிட்டது! எவ்வளவோ நெருக்கடிகள் — எத்துணையோ துன்பங்கள்—தனிமைச்சிறை — இவற்றுக்கு மத்தியிலும் தளராத உள்ளத்தோடு உண்ணாவிரதிகள் காட்டிய வீரமும் நெஞ்சுரமும் உறுதியும் மெய்சிலிர்த்திட வைக்கின்றன; 24 நாட்கள் நமது இளைஞர்கள் மேற்கொண்டிருந்த இந்த ஆன்மீகப்போராட்டத்தின் விளைவாக அவர்கள் பெற்றிருக்கும் பயிற்சியும் அனுபவமும், ஆத்மீகபலமும வருங்காலத்தில் தமிழ் ஈழவிடுதலைபோராட்டத்தை திட்டமிட்டு நடத்துவதற்கு பயன்படும் என்பதற்கு ஐயமேது?

நண்பா, சிறைச்சாலைகளில் நமது இயக்க வீரர்கள் உண்ணாவிரதம் மேற்கொண்டதின் விளைவாக — சாவின் சந்நிதானத்திற்கு சென்று திரும்பியதன் பயனுக — தம்மைத் தாமே அர்ப்பணித்ததன் எதிரொலியாக— வெளியே தமிழர் மத்தியில் — தமிழ் ஈழநாட்டில்—ஏற்பட்ட எழுச்சியும், கொந்தளிப்பும் வீராவேசமும், விடுதலைப் பேரார்வமும் குறிப்பிடத்தக்கவை!

நம்முடைய தலைவர்கள் எவ்வளவுதான அஹிம்சையை வலியுறுத்தியபோதிலும்— தமிழ் இளைஞர் மத்தியில ஏற்பட்ட கொந்தளிப்பின் விளைவாக தமிழ் ஈழத்தில் அரசாங்க உடைமைகள் பல சேதமாக்கப்பட்டதாகச் செய்திகள் வந்தன; இதனல் பல இலட்சக்கணக்கான ரூபாய்கள் அரசுக்கு நட்டமென அறிவிக்கப்பட்டது!

தமிழ்ஈழமடங்கிலும் — குக்கிராமங்கள், பட்டிதொட்டிகள், மூலை முடுக்குகள் எங்கணும் ஏற்பட்ட எழுச்சியின் விளைவாக—சாதி, மத பேதமின்றி கிறிஸ்தவ ஆலயங்களிலும் சைவ ஆலயங்களிலும தமிழ் மக்கள் — முதியோர், இளையோர், மாணவமாணவியர், ஆடவர் பெண்டிர் — அனைவரும் நாள்தோறும் கூடி உண்ணாவிரதங்களிலும் பிரார்த்தனைகளிலும் ஈடுபட்டிருந்த காட்சி தமிழ் தேசிய எழுச்சிப்பிரவாகத்துக்கு எடுத்துக்காட்டன்றோ?

சிறையிருக்கும் விடுதலை வீரர்களின் ஆத்மீக பலத்துக்காகவும், தமிழீழ விடுதலைப் போராட்டத்தை தொடர்ந்து நடத்துவதற்கான ஆத்மீக சக்தியை தமக்குள் வளர்த்துக் கொள்வதற்சாகவும் — பிரார்த்தனையும், உண்ணாவிரதமும் நடக்காத ஊரே தமிழ் ஈழத்தில் கிடையாது எனும்படி — அங்கிங்கெனதபடி எங்கணும் தமிழ் தேசிய உணர்வு பொங்கிப் பிரவாகித்ததை எவரும் மறுக்க முடியாது!

கூட்டுச்சேரா மாநாடு கொழும்பில் நடந்த அதே சமயம் — சிறைச்சாலைகளில் அணு அணுவாகச் செத்துக்கொண்டிருந்த தமிழ்ஈழ விடுதலை வீரர்களின் போராட்டத்தின் மீது நீதிமன்றங்களின் கவனத்தைத் திருப்புவதற்காக—தமிழ் ஈழத்திலுள்ள அத்தனை நீதிமன்றங்களிலும் ஆகஸ்ட் 12ம் திகதி நுழைந்து — நீதிமன்ற நிகழ்ச்சியின்போது இடையே குறுக்கிட்டு நீதிபதிகளிடம் துண்டுப்பிரசுரம் வழங்கியதன் மூலம் தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர்களும் தொண்டர்களும் சட்டமறுப்பிலீடுபட்டதும் அதன் காரணமாக கிளிநொச்சி பா. உ. திரு. வி. ஆனந்தசங்கரியும் கூட்டணித் தொண்டர்களும் என் அருமைத் தம்பிகளுமான ஐ. திருஞானம், விசுவமடு ஜெயபாலன் ஞா. ஞானராசா (மூன்றரை ஆண்டுகள் சிறையிருந்து அண்மையில் விடுதலையாகிய தம்பி ஞானசேகரத்தின் இளவல்) க. புஷ்பகாந்தன், ச. துரைராசசிங்கம் ஆகியோரும் இருவார சிறைத் தண்டனை அனுபவித்துத் திரும்பியதும் உண்ணாவிரதத்தினலேற்பட்ட எழுச்சித்தாக்கங்களே!

சிறையினுள் இருந்திடினும் கூட்டுச்சேரா மாநாட்டுச் சமயத்தில இத்தகைய எழுச்சியை வெளியிலே ஏற்படுத்துவதற்காக தம்மைத் தாமே சாவுக்கும் பலிதரத்துணிந்து, உண்ணாவிரதத்திலிறங்கிய அருமை உடன்பிறப்புகளான—

காசி ஆனந்தன், மாவை சேனதிராசா,
பொ. சத்தியசீலன், பி. வி. திசைவீரசிங்கம்,
த. முத்துககுமாரசாமி, வண்ணை ஆனந்தன்,
கே. சிறீஸ்கந்தராசா, அல்போன் சோ மேரி
ரி. ஜீவராசா, பூபதிபாலவடிவேற்கரன்,
அ. வரதராசா, ஏ. ஆனந்தக்குமார்,
எம். வசந்தகுமார், சி. குவேந்திரராசா,
ஆர். ரத்தினபாலா, எஸ். மகேந்திரன்,

ஆகியோரின் புனிதமான தியாக உள்ளங்களைப் போற்றுவோம்! அவர்கள் ஏற்படுத்திய தீயை தொடர்ந்து தமிழ் ஈழத்தில் அணைய விடாது வளர்ப்போம்.

சிறையிலிருந்திடினும் — கூட்டுச்சேரா மாநாட்டுச் சமயத்தில் தம்மைப் பலிதந்தாவது தமிழ் இனத்தின விடுதலைப் பிரச்சினையை உலகறிய வைப்போம் என்று முடிவுசெய்து அதை இயன்றவரை வெற்றிகரமாக நடைமுறைப்படுத்திஞர்கள் உள்ளேயிருக்கும் விடுதலை வீரர்கள்; அந்த அளவுக்கு வெளியேயுள்ளவர்களாகிய நாமும் நமது கடமையைச் சரிவரச் செய்தோமா என்பதை மனச்சாட்சியுள்ள ஒவ்வொருவரும் தம்மைத்தாமே கேட்டுப் பார்த்துக்கொள்ளட்டும்!

உனது அன்புத்தோழன்,

கோவை-மகேசன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எண்ணம்

## கோலேந்திகளா? 'கோயபெல்ஸ்'களா?

முழுப் பூசினிக்காயை பிடிசோற்றில் மறைக்க முயற்சிப்பதில் வல்லவர்கள் இந்நாட்டு அமைச்சர்கள்! சூரியன் ஒளியை புறங்கையால் மறைப்பதிலும் அசகாய சூரர்கள் அவர்கள்! தாம் கண்ணை மூடிக்கொண்டால் உலகமே இருண்டு விட்டதாக கருதிக்கொள்ளும் அரசியல் ஞானிகள் அவர்கள்! இத்தகைய சூராதி சூர, வீராதிவீர அமைச்சர்களில் முதன்மையானவர்—பொது நிர்வாகம், உள்நாட்டு விவகாரம், வர்த்தகம் ஆகிய மூன்று அமைச்சுப்பொறுப்புக்களையும் தனியொருவராக சுமக்கமாட்டாமல் சுமந்துகொண்டிருக்கும் திரு. டி. பி. இலங்கரத்தின என்று கூறினால் அது மிகையன்று.

யாழ்ப்பாணத்தில் பௌத்த சிங்கள ஆதிக்கத்தை நுழைப்பதற்கு உறுதுணையாக இருந்துவந்த உற்ற தோழர் காலஞ்சென்ற அல்பிறட் துரையப்பாவுக்கு நன்றிக் கடனாக அவரது சிலையை அங்கு திறந்துவைப்பதற்கு சென்றிருந்த அமைச்சர் இலங்கரத்தின, உலக உத்தமர் மகாத்மா காந்தியுடன் துரையப்பாவையும் ஒப்பிட்டுப் பேசியதை மகாத்மாகாந்தி கேட்டிருந்தால் அவமானத்தால் குனறிப்போயிருப்பார்; இந்திய மக்கள் வெட்கித் தலை குனிந்திருப்பார்கள்!

என்னதானிருந்தபோதிலும்—இந்திய நாட்டின் விடுதலைச் சிறபி உத்தமர் காந்தியடிகளை இவ்வளவு தூரம் அமைச்சர் அவமதித்திருக்கவேண்டியதில்லை!

அது எப்படியோ போகட்டும்!

● தமிழ் இளைஞர்கள் தமிழரசுக்கட்சியிடம் வைத்திருந்த நம்பிக்கையைப் படிப்படியாக இழந்துவருகின்றனர்!

● சில தமிழ் அரசியல் தலைவர்கள்தாம் பிரிவினையைத் தூண்டும் பிரசாரங்களை மேற்கொண்டு வருகின்றனா; ஆயினும் மக்கள் நாட்டுப் பிரிவினையை விரும்பவில்லை!

● தமிழுக்கு இலங்கையின் அரசியல் சட்டத்திலிடமளிக்கப்படவேண்டுமென்ற கோரிக்கைக்கு தமிழரசுக் கட்சியினர் விருப்பமில்லாதவர்களாக இருக்கின்றனர்!

இவ்வாறு தமது யாழ் விஜயத்தின் பின்னர் நாளேடு ஒன்றுக்கு அளித்துள்ளபேட்டியில் கூறியிருக்கிறார் திரு. இலங்கரத்தின.

அமைச்சர் இலங்கரத்தினவும், ஏனைய அமைச்சர்களும் இப்படிக் கூறுவது இதுதான் முதற்றடவையல்ல! காக்கை கறுப்புநிறம் என்பதை ஏற்கமறுத்து, இல்லை, அது வெள்ளை நிறம்தான் என்று இவர்கள் திரும்பத் திரும்பக் கூறி வருவது கண்டு, கறுப்புக் காக்கை வெள்ளைக் காக்கையாகிவிடாது; அறுவை சிகிச்சை நடந்தால் மட்டுமே அவர்களது கண்கள் சரியான அரசியல் பார்வையைப் பெறமுடியம்!

அமைச்சர்களும் அரசும் நடத்திவந்த இதே பொய்ப் பிரசாரத்தை முறியடிக்கத்தான் மூதறிஞர் தந்தை செல்வா தம்முடைய பதவியைத் துறந்து காங்கேசன் துறை இடைத்தேர்தலை ஏற்படுத்தினர்! அந்தத்தேர்தல் முடிவு அரசுக்கு கொடுத்த மரண அடிக்குப் பின்னரும் தொடர்ந்து திட்டமிட்டுபொய் ஒன்றையே மூலதனமாகக்கொண்டு 'கோயபெல்ஸ்' பிரசாரத்திலீடுபடும் இவர்களை கோலேந்திகள் என்பதா அல்லது அரசியல் சோமாளிகள் என்பதா?

அமைச்சர் இலங்கரத்தின அவர்களே! உம்மிடம் பின்வரும் கேள்விகளை கேட்கிறோம்!

புதிய அரசியலமைப்புத் திட்டத்தை தயாரிப்பதற்கு கூடிய அரசியல் நிர்ணய சபைக் கூட்டங்களில் தமிழரசுக்கட்சியினர் கலந்துகொண்டு அரசியல சட்டத்தில் தமிழ்மொழிக்கும், தமிழ் இனத்துக்கும் உரிமைகளுட உத்தரவாதமும் பாதுகாப்பும் அளிக்கப்படவேண்டுமென்று பன்னிப்பன்னி வாதாடியபோது—அடிப்படைத் தீர்மானங்களுக்குத் திருத்தம் கொண்டு வந்தபோது—தமிழுக்கும் தமிழினததுக்கும் உரிமைகளை வழங்குவதற்கு கொஞ்சம்கூட இஷ்டமின்றி அவற்றை முற்றுக நிராகரித்தவர்கள் நீரும் உமது அரசாங்கமும் தான என்பதை உம்மால் மறுக்கமுடியுமா?

அரசியல் சட்டத்தில் தமிழுக்கு உரிமை மறுக்கப்பட்ட நிலையில் அரசியல் நிர்ணய சபையைவிட்டு வெளியேறிய தமிழரசுக் கட்சியினர்—தமிழர் கூட்டணியாகிய பின்னர் 1972 யூன் திங்களில் தமிழர் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு ஆறு அம்சக்கோரிக்கையொன்றை பிரதமருக்கு விடுத்ததையும், அது பிரதமரால் அலட்சியப்படுத்தப்பட்டு, தமிழ் மக்கள் அவமதிக்கப்பட்டதையும் மறுப்பீரா?

இப்போது தமிழரசுக்கட்சிதான் ஏதோ தமிழுக்கு எதிராக இருப்பதாக தமிழ் மக்களிடமே சென்று கதையளக்கப் புறப்பட்டிருக்கும் உம்மைக் கண்டு இந்த நாடு கைகொட்டி நகைக்காமல் வேறு என்ன செய்யும்?

உமது கூற்றுப்படி தமிழ் ஈழப் பிரிவினைக்கு தமிழ்மக்களிடம் ஆதரவு இல்லையென்பது உண்மையானல் — தமிழ் இளைஞர்களுக்கு இந்தக் கொள்கை மீது நாட்டமில்லையெனபது உண்மையானல்—வடக்கில் எதற்காக இராணுவத்தையும்பொலிசையும் குவித்துவைத்துக் கொண்டிருக்கிறீர்கள்? எதற்காக நாள்தோறும் தமிழ் இளைஞர்களை வேட்டையாடுகிறீர்கள்?

நாட்டின் பாதுகாப்புக்கு ஆபத்தானவர்கள் என்று கூறிக்கொண்டு எதுவித குற்றமுமற்ற தமிழ் இளைஞர்களை சிறைச்சாலைகளில் எதற்காக ஆண்டுக்கணக்காக அடைத்துவைத்து அவர்களை அணு அணுவாகக்கொல்லுகிறீர்கள்?

அமைச்சர் அவர்களே! நீரும் உமது அரசும்போடும் உருத்திராட்சப்பூனை வேடத்தால் யாரையும் ஏமாற்ற முடியாது.

ஏனெனில் தமிழினத்தின் அபிலாஷைகளையும், அதன் இன்றைய நிலையையும் உலகம் அறிந்துகொண்டுவிட்டது!

# கம்பளையிலும் தமிழர்களின் காணிகள் சுவீகரிப்பு

கம்பளைப் பகுதியில் குவீன்ஸ் பீல்ட் தோட்டத்தில் இலங்கைப் பிரஜைகளான ஏழு தமிழ்க்குடும்பங்களுக்குசொந்தமான விவசாய—குடியிருப்பு காணிகளான சுமார் 124 ஏக்கர் நிலத்தை சுவீகரிக்கும்படி காணி விவசாய அமைச்சு உத்தரவு போட்டிருப்பதாகத் தெரிய வருகிறது. இந்த ஏழு குடும்பங்களிலும் மொத்தமாக 69 பேர் தங்கியிருக்கிறார்கள்.

இந்த ஏழு குடும்பங்களும் தனித்தனிக் குடும்பங்கள் என்றும் இவர்கள் வேறு காணிகளோ, சொத்துக்களோ அற்றவர்கள் என்றும் அறியப்படுகிறது. இவர்கள் தங்கள் நிலையை எடுத்துக்கூறி ஆட்சேபித்தபின்னர், ஆக ஒரேயொரு ஏக்கரை மட்டும் விட்டுவிட்டு ஏனைய நிலத்தை எடுக்கும்படி இப்போது ஓர் புது உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளதாம். இதையும் ஆட்சேபித்து, தங்களுக்கும் தஙகள் குடும்பங்களைச் சேர்ந்த 69 பேருக்கும் வேறு காணி பூமி இல்லாததால், குறித்த 124 ஏக்கரையும் சுவீகரிப்பிலிருந்து நீக்குவதற்கு நடவடிக்கையெடுக்கும்படி இவர்கள் பிரதமருக்கு விண்ணப்பித்திருக்கிறார்கள்.

### ஹேவா ஹெட்ட நிலைமை

இது, இப்படியிருக்க ஹேவாஹெட்ட தொகுதியில் சுலஹா நகரில் கடந்த 31-8-76ல் சுவீகரிக்கப்படவிருந்த 69 தமிழர்களுக்குச் சொந்தமான வீடுகள், தற்காலிகமாக சுவீகரிப்பிலிருந்து தடுத்துவைக்கப்பட்டிருக்கின்றன. இங்கு வாழ்பவர்களும் இலங்கைப்பிரஜைகளான 700 தமிழர்களே என்பது குறிப்பிடத்தக்கது. இந்த வீடுகள் சுவீகரிப்பு சம்பந்தமான வர்த்தமானி அறிவிப்புக்கூட தனிச் சிங்களத்தில் மட்டும் வெளியிடப்பட்டது குறிப்பிடத்தக்கது. இவ்வீடுகளை சுவீகரிப்பதை ஆட்சேபித்து மூதறிஞர் தந்தை செல்வாவும் பிரதமருக்கு தந்தி அடித்திருந்தது குறிப்பிடத்தக்கது.

## இரு அரங்குகளில் ஈழவேந்தன்

5-9-76 ஞாயிறு அன்று இலங்கைப் பல்கலைக் கழக யாழ் வளாகத்தில் தமிழ மன்றம் நடாத்தும் கலை விழாவில் "மொழியும் வாழ்வும்" என்னும் பொருள் பற்றியும், 6-9-76 திங்கள் வவுனியா சுத்தானந்த இந்து இளைஞர் மன்றம் நடததும் கலாச்சார அரங்கில் "செந்தமிழ் இன்றேல் சிவநெறி இல்லை" எனும் பொருள்பற்றியும் சிறப்புரைகள் நிகழ்த்துவார்.

## இளைஞர் நிதிக்கு அன்பளிப்பு

விலைமதிப்புத் திணைக்கள தமிழ் ஊழியர்களின் சார்பில் சிறையிருக்கும் தமிழ் இளைஞர் குடும்ப உதவிநிதிக்கென ரூபா 200.00 அண்மையில் வழங்கப்பட்டது. இந்நிதியை மேற்படி ஊழியர்களின் சார்பில் திரு. நியூரன் ஞானச்சந்திரன் சுதந்திரன் ஆசிரியர் திரு. கோவை மகேசனிடம் கையளித்தார். இந்நிதி உடனடியாக இதற்குப்பொறுப்பான திரு. வி. தர்மலிங்கம் பா. உ. விடம் ஒப்படைக்கப்பட்டது.

## மண்டூரில் காவடி

சிறையிருக்கும் தமிழ் விடுதலை வீரர்களின் விடுதலை வேண்டி 7. 8. 76 செவ்வாய்க்கிழமை, மண்டூர் தமிழ் இளைஞர் பேரவையினர் நேர்த்தி வைத்துக் காவடி எடுக்கின்றனர்.

## பொலிசாரே...

—1-ம் பக்கத் தொடர்

ரிகள் இருவரும் குற்றம் புரிந்துள்ளது இவ்வழக்கில் நிரூபிக்கப்பட்டுள்ளது திரு. முருகேசு நடராசலிங்கத்தை எதிரிகள் தாக்கினர்கள் என்பது நிரூபிக்கப்பட்டிருக்கிறது.

குற்றவாளிகளாகக் காணப்பட்ட முதல் எதிரி சப் இன்ஸ்பெக்டர் ஹூகொடவுக்கு 1500 ரூபா பிணையுடன் கூடிய 3 வருட நன்னடத்தையும் இரண்டாம் எதிரி சோமரத்தினவுக்கு 250 ரூபா பிணையுடன் கூடிய ஒருவருட நன்னடத்தையும் விதித்து நீதவான் திரு. கே. ஞானச்சந்திரன் தீர்ப்பு வழங்கினர்.

இவ்வழக்கில் சட்டத்தரணிகள் திரு. என். நடராசா, செல்லத்தம்பு, கிருஷ்ணராசா ஆகியோரின் அனுசரணையுடன் சட்டத்தரணி [illegible] முறைப்பாட்டுக்காரர் சார்பில் ஆஜராகி வாதாடினர்.

## சாலம்பை பிள்ளையாருக்கும் ஆபத்து வருகிறது!

தமிழர்களின் வணக்கஸ்தலங்களும் படிப்படியாக பௌத்த ஆதிக்கத்துக்குட்படுத்தப்பட்டுவருவது தமிழ் மக்கள் அறிந்ததே. அந்த வரிசையில் இதோ மற்ருேர் நிகழ்ச்சி;

பொத்துவிலில் இருந்து ஒரு மைலுக்கு அப்பாலிருக்கிறது சாலம்பை பிளளையார் கோவில். இந்த ஆலயம் மிக நீண்டகாலமாக தமிழர்களின் — இந்துக்களின் வணக்கஸ்தலமாக இருந்து வருகிறது. இந்த ஆலயத்துக்கு தம்மை புதைபொருள் ஆராய்ச்சியாளர் என்று அறிமுகப்படுத்திக்கொண்டு ஒருவர் சென்ருராம். சென்றவர் மேற்படி கோவில் முகாமையாளர் திரு. க. சாமித்தம்பியிடம் சென்று, "இந்த இடத்தில் புத்தர் சிலையும் பௌத்தர்களின் வணக்கத்துக்குரிய சாதனங்களும் இருந்ததற்கு ஆதாரம் இருக்கிறது. நீங்கள்தாம் புத்தர் சிலையை அகற்றிவிட்டு, அந்த இடத்தில் பிள்ளையாரை வைத்திருக்கிறீர்கள் இரண்டு நாளைக்குள் இந்த இடத்திலிருந்து பிள்ளையாரை அகற்றிவிடவேண்டும்; இன்றேல் நாங்கள் நேரடியாக நடவடிக்கை எடுக்க நேரும்" என்று மிரட்டினராம்.

அதற்கு, திரு. சாமித்தம்பி பின்வருமாறு கூறினராம்:— "இந்தக்கோவில் சுமார் கால்நூற்றண்டுக்கு முன்னர் இங்கு கடடப்பட்டது, கோவில் கட்டுவதற்கு முன்பிருந்தே இங்கு பிளளையாரை கோவில் இல்லாமல் இதே இடத்தில் வைத்து வணங்கி வநதிருக்கிறோம். இந்தக் கோவிலை நீங்கள் உடைப்பதென்றால்— எனது உயிரும், இங்கு வாழும் ஏனைய விநாயக பக்தர்களின் உயிரும் பறிக்கப்பட்ட பின்னரே அது உங்களால் முடியும்" என்று அழுத்தம் திருத்தமாக கூறவே — 'அரசாங்கம் கட்டளையிட்டால், நாம் செய்யத்தான் வேண்டும்' என்று கூறிவிட்டு வந்த வழியே திரும்பிவிட்டாராம் புதைபொருளாராய்ச்சி உத்தியோகத்தர் என்று தம்மை அறிமுகப்படுத்திக் கொண்டவர்.

வாங்கிவிட்டீர்களா?

சுடர்

ஆவணி இதழ்

● 'என் கணவர்' - திருமதி மங்கையர்க்சரசி அமிர்தலிங்கத்தின் விறுவிறுப்பான கட்டுரை.
● கவிஞர் காசி ஆனந்தனின் 'தித்திக்கும் கவிதைகள்
● பிரபல நாவலாசிரியர் கே. எஸ். ஆனந்தனின் தொடரோவியம்!
● கோவை மகேசனின் தத்துவச் சிந்தனைகள்!
● மூன்று முத்துச் சிறுகதைகள்.
● கலைஞர் கருணாநிதியின் பதில்கள், கேள்வி பதில், மருத்துவக் குறிப்புக்கள், விஞ்ஞானக் கட்டுரைகள்—இன்னும் பல நகைச்சுவை அம்சங்களுடன்.

தமிழர் தளபதி அமிர்தலிங்கம் அவர்களின் வண்ண முகப்போவியத்துடன்

எங்கும் விற்பனையாகிறது! விலை ரூபா ஒன்று மட்டுமே!

● சுடர் ஒன்றே சிறந்த கலை இலக்கியத் திங்களிதழ்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழர் விடுதலைக்கூட்டணியினுல்தான் முஸ்லிம் மக்களுக்கும் விமோசனமேற்படும்!

## செல்வா இல்லக் கருத்தரங்கில் முஸ்லிம் பிரமுகர் முழக்கம்!

**"புத்தளத்தில் ஏற்பட்ட கலவரத்தினுல் முஸ்லிம்களாகிய நாம் கடுமையாகப்பாதிக்கப்பட்டபோது, எமக்கு ஆதரவாக, எமது பிரச்சினை பற்றி விசாரிப்பதற்கு நீதி விசாரணைக் குழுவொன்றை நியமிக்கும்படி துணிச்சலுடன் பிரதமருக்கு எழுதியர் தந்தை செல்வநாயகம் ஒருவர் மட்டும்தான் என்பதை முஸ்லிம்களாகிய நாம் என்றும் மறக்கமாட்டோம்! இதற்காக அவருக்கு நாம் நன்றிக்கடன் பட்டுள்ளோம். தந்தை செல்வா அவர்கள் எடுத்துக்கொண்ட நடவடிக்கை காரணமாகவே உலக முஸ்லிம் நாடுகள் அனைத்துக்கும் எமது பிரச்சினையை அறிவிக்கக் கூடியதாகவிருந்தது!**

"முன்னொரு காலத்தில் முஸ்லிம்கள் இந்நாட்டின் சிறுபான்மை இனம், பெரும்பான்மை இனத்துடன் சேர்ந்து வாழ்ந்தால்தான் வாழ முடியும் என நினைத்தார்கள். ஆனல் இன்று நிலைமை மாறி சிறுபான்மை இனத்திற்காகப் பாடுபடும் தமிழர் விடுதலைக் கூட்டணியால்தான் முஸ்லிம்களின் பிரச்சினைகளையும் தீர்த்துவைக்க முடியும் என்று முஸ்லிம்களில் பலர் உணர ஆரம்பித்து விட்டார்கள்.

"அண்மையில் கல்குடாத் தொகுதி உறுப்பினர் திரு. தேவநாயகத்தால் நடாத்தப்படும் 'காவலன்" ஏடுகூட எமது பிரதிநிதி நைனு மரக்காயரின் முயற்சியால், இச்சம்பவத்தில் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு ரூபாய் 1000/- அரசாங்கத்தால வழங்கப்பட உள்ளது என்ற ஒரு செய்தியை பிரசுரித்திருந்தது. ஆனல் இது பற்றி எமது உறுப்பினரிடம் கேட்டபோது தான் கேட்டது மெய் என்றும் அவர்கள் அப்படித் தருவதாக வாக்களிக்கவில்லை. இச்செய்தி தவருனது என்றும் கூறினர்.

தமிழர் கூட்டணியினுல்தான் முஸ்லிம்களுக்கு விமோசனம் என்று முஸ்லிம்கள் உணரத் தொடங்கிய இந்நிலையில் நாங்கள் நான்கு கோரிக்கைகளை தமிழர் கூட்டணியிடம் முன்வைக்கின்ருேம். இந்த நான்கு கோரிக்கைகளின் மீதும் தமிழர் கூட்டணி நடவடிக்கை எடுக்குமானுல் இதுவே இலங்கையின் பெரும்பான்மையான முஸ்லிம்கள் தமிழர் கூட்டணியுடன் இணைவதற்கு சாதகமாக அமையும். அக்கோரிக்கைகள் இவைதாம்.

1. புத்தளத்தில் இடம் பெற்ற அசம்பாவிதங்களுக்கு பொறுப்பாகவிருந்ததாக கருதப்படும் பொலிசாரில் வழக்குத் தொடர வேண்டும்.

2. அதனுல் பாதிக்கப்பட்ட மக்களுக்கு அரசிடம் இருந்து உதவி பெற்றுக் கொடுக்கவேண்டும்.

3. புத்தளம் அரசாங்க அதிபர் பல முஸ்லிம் கடைகளை அங்கிருந்து அகற்றத் திட்டமிட்டுள்ளார் இதைத் தடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும்,

4. இந்தக் கலவரத்தின் காரணத்தால் மூளை மிகவும் பாதிக்கப்பட்டஆசிரியர் ஒருவருக்கு பிறநாட்டில் வைத்தியம் செய்வதற்கு உரிய ஒழுங்குகளைச் செய்துதர வேண்டும்."

**—இவ்வாறு புத்தளத்தைச்சேர்ந்த டாக்டர் இலியாஸ் தந்தை செல்வாவின் இல்லத்தில் 1-9-76ல் திரு. ஈழவேந்தன் தலைமையில் நடைபெற்றகருத்தரங்கில் பேசும்போது குறிப்பிட்டார். இதில் புத்தளம் தமிழ பேசும் இளைஞர்மன்றப் பிரதிநிதிகளும் கலந்துகொண்டனர்**

இதற்கு முன்னர் டாக்டர் இலியாசும், புத்தளம் தமிழ் பேசும் இளைஞர்மன்ற பிரதிநிதிகளும் தந்தை செல்வாவையும், தமிழர் விடுதலைக் கூட்டணி செயல் அதிபர்களில் ஒருவரான திரு. மு. சிவ சிதம்பரத்தையும் சந்தித்துப்பேசினர்.



செல்வம்:— கடைசியாப் பார்த்தால் நம்மட ஆக்களிட போராட்டம் எல்லாம் இப்படித்தான் என்ற மாதிரி ஆயிற்று.

குணம்:— எந்தப் போராட்டம்?

செல்வம்:— எங்கட இளைஞர்களிட உண்ணுவிரதப் போராட்டத்தைத்தான் சொல்லுறன்.

குணம்:— ஏன்? இப்ப அதில என்ன பிழை?

செல்வம்:— இல்லே,சாகும் வரை உண்ணுவிரதம் என்று துவங்கிற்று, அதை ஒரு முடிவு காணமுந்தி நிறுத்தினது பிழை இல்லாமல் சரியா?

குணம்:— செல்வம், கதைக்கிறத யோசிச்சுக் கதைக்கவேணும், எல்லாம் தெரிஞ்சமாதிரி எதுவும் பேசக்கூடாது. உண்ணுவிரதத்தை அவங்களா நிற்பாட்டினுங்களா? அல்லது நிற்பாட்ட வைச்சாங்களா?

செல்வம்:— எப்படியோ .........!

குணம்:— என்ன? எப்பிடியோ... உண்ணுவிரதத்தை நிறபாட்டுற முயறசியில சிறைச்சாலையைச் சேர்ந்தவங்க எவளவு பயங்கரமான நடவடிக்கைகளில ஈடுபட்டு உண்ணுவிரதிகளைச் சித்திரைவதை செய்தாங்கள். அதுக்கெல்லாம் அசைந்து குடுக்காதவங்க ஏன் பிறகு உணணுவிரதத்தைக் கைவிட்டாங்க. பெரியவர் கேட்டுக் கொண்டார் என்றதால தானே?

செல்வம்:— பெரியவர் கேட்டதால விட்டாலும் — விரதத்தைக் கைவிட்டது அவமானம் இல்லையா.

குணம்:— அட முட்டாள் பயலே உண்ணுவிரதத்தைக் கைவிடாமல் விட்டிருந்தால் அதைவிடப் பெரிய அவமானம் இல்லையா ஏற்பட்டிருக்கும்.

செல்வம்:— எப்படி?

குணம்:— ஈழத் தமிழர்களுக்கெல்லாம் இணையற்ற தலைவனுக தந்தையாக பெரியவர் இருக்கிருர். இன்றைக்கு அகிம்சை என்று சொல்லிக்கொண்டிருக்கிற பெரியவர் — இப்போ கடைக்கண்ணுல அசைவு காட்டினுல் போதும் — பொங்கியெழுந்து பலாத்காரத்தை கையாள ஆயிரக் கணக்சான இளைஞர்கள் துடித்துக் கொண்டிருக்கிருர்கள். அப்படி பெரியவருடைய கண் அசைவுக்கே கடமை புரியக் கூடிய தமிழர்கள்— அவர் காலினுல் இட்ட கட்டளையை தலையினுல் செய்துமுடிக்கவேண்டிய இளைஞர்கள்—பெரியவர் இரந்து — உருகிக்கேட்டபொழுது கூட, அவரது வேண்டுகோளைப் புறக்கணித்தால், அதைவிட வேறு அவமானம் என்னப்பா இருக்கு. செலவநாயகத்துக்கு தமிழர்களே மதிப்பளிக்கிறதில்லையென்று பழிக்கமாட்டார்களா—

செல்வம்:— அதுவும் சரிதான்...

— அற்லஸ்

## விடுதலை வீரர்களுக்கு வரவேற்பு!

சட்டமறுப்புப் போராட்டத்திலீடுபட்டு சிறை சென்று மீண்ட திரு. வி. ஆனந்தசங்கரி பா. உ. வுக்கும் மறறும் 5 தொண்டர்களுக்கும் 4 ஆண்டுகள் சிறையிருந்து மீண்ட ஞானசேகரம், அமரசிங்கம் ஆகியோருக்கும் பூநகரியைச் சேர்ந்த தம்பிராயில் 4-9-76 சனிக்கிழமை மாலை தம்பிராய் ப. நோ. கூ. சங்கக்கடைக்கு அருகில் வரவேற்பு அளிக்கப்படுகிறது. ந. நாகராசா தலைமையில் நடைபெறும் இச்கூட்டத்தில் நாவலர் அ. அமிர்தலிங்கம், திருமதி அமிர்தலிங்கம், அடலேறு ஆலாலசுந்தரம் ஆகியோருட்பட பலர் பேசுகிருர்கள்

### வவுனியா தொகுதி த.இ.பேரவை மத்திய குழு

வவுனியாத்தொகுதி த இ. பேரவையின் மத்தியகுழு அங்குரார்ப்பணக் கூட்டம் 6. 9. 76 திங்கட்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு வவுனியா சாந்தி படமாளிகையில் நடைபெறும். இக்கூட்டத்தில் திரு. சே. ம. செல்லத்தம்பு பா. உ. திரு. வி. என். நவரெத்தினம் ஆகியோர் பேசுவாகள்.

## சட்டக் கல்லூரி தமிழ் மன்றம் தலைநகரில் முத்தமிழ் விழா

### தந்தை செல்வா பங்குகொள்கிறுர்!

சென்ற ஆண்டு முத்தமிழ்விழா எடுத்து பெருமைகண்ட சட்டக்கல்லூரித் தமிழ் மன்றம் இவ்வாண்டும் தந்தை செல்வாவின் தலைமையில் பாரம்பரிய பெருமையை நிலைநாட்டத் தமிழுக்கு விழா எடுக்கின்றது. இன்று ஞாயிற்றுக்கிழமை (5-9-76) காலை 9 மணி முதல் இரவு 10 மணிவரை வெள்ளவத்தை இராமகிருஷ்ண மிசன் மண்டபத்தை இயல் இசை நாடகம் எனத தமிழ் ஒலி ஆக்கிரமித்துக்கொள்கிறது. விழாவில் சிறப்பு நிகழ்ச்சிகள் பின்வருமாறு:-

காலை தங்கப்பதக்கத்துக்கான பேச்சுப்போட்டியும் அதையடுத்து பெண்சட்டத்தரணிகளுக்கும். சட்டமாணவர்களுக்குமிடையேயான விவாதப்போட்டியும் இடப்பெறுகிறது.

இதையடுத்து, "தமிழ் மக்களின் எதிர்காலம் என்ன?" என்ற தலைப்பில் நடைபெறும் கருத்தரங்கில், திருவாளர்கள் மு. சிவசிதம்பரம் (செயல் அதிபர், தமிழர் கூட்டணி) வ. நவரத்தினம் (சுயாட்சிக் கழகம்) பி. [illegible] (லங்கா சமசமாஜ[illegible]) [illegible] (கம்யூனிஸ்ட்) மசூர். மவ்லானு (ஐ. தே. கட்சி) ஆகியோர் பேசுகின்றனர்.

மாலை நிகழ்ச்சியின்போது பிரதம அதிதி தந்தை செல்வா உரையாற்றுவார். அதைத்தொடர்ந்து செ. இராசதுரை பா. உ, "நேற்று இன்று, நாளை" எனும் தலைப்பிலும், க. துரைரத்தினம் பா. உ. 'சட்டமும் தமிழும்' எனும் பொருள்பற்றியும் ஆற்றும் உரைகள் இடம் பெறும்.

தொடர்ந்து தமிழ் இன உணர்வுக்கு உத்வேகம் தருகின்ற முறையில் அமைக்கப்பட்ட நடனம், நாடகம் போன்ற கலை நிகழ்ச்சிகள் இடம்பெறும்.

## பிறந்த தின வாழ்த்து



பொல்ஹேன்கொட வீதி கொழும்பு 6ல் வதியும் இளலிங்கம் தம்பதிகளின் அன்புச்செல்வன் மயூரன் தனது முதலாவது பிறந்த தினத்தை 6-9-76 திங்கட்கிழமை கொண்டாடுகின்ருர்.

அன்னைத் தமிழின் அருங்குமரன் சீரும் சிறப்புடனும் பல்லாண்டு வாழ தாய் தந்தையுடன் மற்றும் உற்ருர் உறவினர்களும் வாழ்த்துகின்றனர்.



திருமதி சுசிலா சூசைப் பிள்ளையின் மாணவியும் கணேஷன் தம்பதிகளின் புதல்வியுமான செல்வி. தேவகியின பரதநாட்டிய அரங்கேற்றம் இம்மாதம் 5ம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை நவரங்கஹல கலை அரங்கில் நடைபெறும்.

## வாழ்த்துகிறோம்

30 - 8 - 76 செவ்வாயன்று. இல்லறத்தில் இனிதே அடி வைத்த க. நடராசா தம்பதிகளை (உரிமையாளர், ராஜன் புத்தகசாலை, யாழ்ப்பாணம்) தமிழும் சுவையும் போல,பேறுகள் பல பெற்று வாழ்கவென வாழ்த்துகிறோம்—

— சுதந்திரன்


## அன்பான வேண்டுகோள்

உங்கள் அபிமானத்திற்குரிய மில்க்வைற் நீல சோப் மேலுறைகள் இன்றி சில காலத்திற்கு விற்பனைக்கு விடப்பட்டுள்ளது. இக்குறையினைப் பொறுத்துக் கொள்ளும்படி பொதுமக்களைப் பணிவுடன் கேட்டுக்கொள்ளுகிறோம்.

விலையில் எவ்வித மாற்றமும் இல்லை.

**மில்க்வைற் சவர்க்காரத் தொழிலகம், யாழ்ப்பாணம்**


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# எங்கிருந்தாலும் தமிழுக்கு தொண்டு செய்பவர்கள்!

சிறுகதை

நான்கு சுவர்களுக்கு மத்தியில் நாளெல்லாம் இருப்பவர்கள் சிறைக்கைதிகள் அவர்களை மேற்பார்வையிடுபவர்களும் அந்தச் சுற்றுச் சூழ்நிலையில் இருக்கும்வரை ஒருவகையில் பார்த்தால் கைதிகளைப் போன்றவர்களே. இந்த உண்மையை சிறைச்சாலை உத்தியோகத்தர் எவருமே மறுப்பதில்லை. பிழைப்புக்காக இத்தொழிலை ஏற்றுள்ள என் போன்றவர்களுக்கு சிறைச்சாலை வாழ்வு நரகலோகம் போன்றது.

கண்டி போகம்பரைச் சிறைச்சாலையில் உத்தியோகம் வகிக்கும் எனக்கு சதா பல்வேறு குற்றவாளிகளைப் பார்த்துப் பார்த்தோ என்னவோ மனதில் சிறை என்றாலே கசப்பான உணர்வே எழுகிறது. ஏன் எனில் சிறைச்சாலை எந்தக் குற்றவாளியையும் திருத்தும் இடமாக இல்லை. மாருக திரும்பத் திரும்பவரும் குற்றவாளிகளின் எண்ணிக்கையே இங்கு அதிகரிக்கிறது.

போகம்பரை சுற்றிவர பலமான பெரும்மதில்களுடன், தெற்கே பார்த்தபடி பிரம்மாண்டமான இரண்டு நுழைவாசல்கள்கொண்டது. இரண்டாம் வாசலோடு இடதுபக்கமாக சிறைச்சாலை காரியாலயம். அதை மருவினற்போல் சமையல் அறையும் அடுத்து களஞ்சியமும் அமைந்துள்ளது. களஞ்சியத்திற்கும் மேற்குப்பக்க மதிலுக்கும் இடையே தையல் கூடம். அப்படியே வடக்கே திரும்பினல் சலவைப்பகுதி, அதன் அருகே ஒரு பெரும் அரச விருட்சம். இதற்குக் கீழ் தூக்கிலிடும் அறை உள்ளது. இரண்டாம் வாசலின் வட பக்கமாக கைத்தொழில் சம்பந்தமான துறைகளில் கைதிகளுக்கு பயிற்சியும் வேலையும் இடம் பெறுகிறது.

சிறைக்கூடத்திற்கு செல்லும் வழியின் இருமருங்கும் அழகியதும் விதவிதமானதுமான அழகிய பூஞ்செடி கொடிகள். இந்துமதக் கைதிகளுக்கான வழிபாட்டு மண்டபத்தை தாண்டினல் இரண்டடுக்கு சிறைக்கூடம் எதிர்ப்படும்.

இதில் ஒரு பகுதி தூக்குத் தண்டனை கைதிகளுக்கானது. அதன் உள்ளே வடமேறகு மூலையாக மரணதண்டனை நிறைவேற்றும் இடம் உள்ளது. சிறைச்சாலையின் அமைப்பையும் சிறைக்கைதிகளைப் பற்றியும் நினைந்து கொண்டிருந்த நான் எனது மேலதிகாரியின் அழைப்பொலி கேட்டு நிமிர்ந்தேன்.

நீதிமன்றங்களில் தண்டனை விதிக்கப்பெற்ற கைதிகளை பெரும்பாலும் மாலை நேரத்திற்றன் சிறைச்சாலைக்குக் கொண்டுவருவார்கள். இன்று மாலை வந்த கைதிகளில் ஒருவனை தூக்குத் தண்டனை விதிக்கப்பெறுய கைதிகளை அடைக்கும் அறை ஒன்றில் விடும் பொறுப்பு என்னிடம் ஒப்படைக்கப்பட்டது. என்னுடன்கூட ஒரு சிறை அதிகாரியும் வந்தார்.

கைவிலங்கிடப்பெற்று நின்ற கைதியை ஒருமுறை உற்று நோக்கினேன. வயது இருபத்திரண்டு மதிக்கலாம்-நெடுநாட் சவரம் செய்யாத முகம். போஷாக்கான உணவின்மையால் வாடிய உடல். வெள்ளை நிறம் கொண்ட அவன் விழிகள் அறிவின் தீட்சண்யமிக்கதாய் ஒளிவீசிற்று. நெஞ்சில் உரமும் நேர்மைத் திறனும் கொண்டவன் என்பதை அவன் நின்ற தோரணை புலப்படுத்திற்று. அவனைப் பார்த்தால் தமிழன் என்ற உணர்வே எனக்கு எழுந்தது. இதுநாள்வரை நான் கண்ட குற்றவாளிகளிடையேயிருந்து இவன் வேறுபட்டுத் தோன்றினன். பயங்கரக் குற்றம் செய்யக் கூடியவனுய் அவன் எனக்குப்படவில்லை.

சிறைச்சாலை அவனுக்குப் புதிது என்பது அவன் அங்குமிங்கும் பார்வையை அலையவிட்டு சுற்றுடலை நோக்கியதைக்கொண்டு அறிந்தேன்.

அவனுக்கு முன்பின் தெரியாதபோகம்பரைச் சிறைச்சாலையில் "கெதியாக முன்னுக்கு நட" என என்னுடன் வந்த அதிகாரி — அவர் ஒரு சிங்களவர் — அவனை சிங்களத்தில் அதட்டினர். எங்கே எப்படிப்போவது என்று தெரியாமல் அவன் என்னைப் பரிதாபமாக பார்த்தான்.

"நேரே நட" என்றுகூட வந்த அதிகாரி மனம் குளிரட்டும் என்று தமிழில் அதிகாரத்தொனியில்கூறினேன. இந்துக் கைதிகளின் வழிபாட்டு மண்டபத்தைக் கடக்கையில்—தமிழ்க் கைதிகள் வணங்கும் — முருகன் திரைதென்பட்டது. கண்ட அவன் நின்று நெஞ்சோடு கரம் கூப்பி வணங்கிவிட்டு நடந்தான். அவன் செய்கையை என்னுடன் வந்த அதிகாரி பெரேரா கவனித்தார். இருவரும் ஒரு கணம் ஒருவரையொருவர் பார்த்தோம். அவர் அர்த்தமுடன் தலையசைத்தார். அது அவன் நல்ல அறிவுள்ள கைதி எனக் கூருமல் கூறிற்று.

கைதிகள் யாவரும் அறைகளில் அடைக்கப்பட்டிருந்ததால் வெளியில் உத்தியோகத்தர்கள் மட்டுமே நடமாடிக்கொண்டிருந்தனர்.

எம்முடன் வந்த கைதியை அடைக்கவேண்டிய அறை வந்ததும் அதிகாரி திறப்பை என்னிடம் தந்து அந்த அறையை திறக்கச்சொன்ஞர்.

வெளிச்சமே இல்லாத அந்த இருட்டறையைத் திறந்து அவனை "உள்ளே போ" என்றேன்.

'இந்த இருட் குகைக்குள் எப்படிப்போகிறது' என்பது போல் என்னைப் பார்த்தான, அவன் தயக்கத்தைப் பார்த்த பெரேரா "போடா உள்ளே" எனக் கோபத்துடன் கொச்சைத் தமிழில் உறுமினர். கைதி அமைதியாய் நிற்பதைக் கண்ட பெரேரா ஆத்திரம் கொண்டவராய் அவனை அடிக்கக் கை ஓங்கினர். அவர் அடிக்கு முன் என் கைகள் கைதியை அறையுள்ளே தள்ளிவிட்டுக் கதவைச் சாத்தியது.

சிறைச்சாலை அன்போ கருணையோ பொறுமையோ மருந்துக்கும் இல்லாத இடம் என்பதை அவன் அறியாதவனே என நினைந்தேன்.

கதவைப் பூட்டியபடியே "இவனுக்குச் சாப்பாடு கொடுக்கணுமா சேர்" என்று ஆங்கிலத்தில் கேட்டேன்.

"இல்லை இல்லை எல்லாம் இனிக் காலையில்தான்" என்ருர் அதிகாரி.

அவன் ஒரு புதுமையான கைதியாக என் மனக்கண்ணில் தோன்றினன். அவனைப்பற்றிய விபரத்தை அவன் மூலம்தான் நான் கேட்டறிய வேண்டுமேதவிர சிறைக் காரியாலயத்திற் போய்க் கேட்கமுடியாது. இரவு அப்பகுதிக்குக் கடமைக்கு வருகையில் அவனுடன் கதைகக முடிவுசெய்து கொண்டு நான் அதிகாரியுடன் காரியாலயத்தை நோக்கி நடந்தேன்.

அன்று இரவுக் கடமை உத்தியோகத்தர் ஒருவர் வராததால் இரவுக் கடமையையும் நானே செய்யவேணடியிருந்தது. இரவுக் கடமை இருபிரிவானது. ஒன்று மாலை 5 மணியிலிருந்து எட்டுமணி மட்டும்; மற்றது நள்ளிரவு 12 மணியிலிருந்து விடிய 6 மணி மட்டும். முற்பகுதிக் கடமையில் நான் கடமை புரியும் பகுதி மறியற்காரரைக் கணக்கிடவேண்டும். கணக்கிடும்போது அவர்கள் இலக்கங்களைப் பதிந்து கணக்கெடுக்கவேண்டும். அதற்காக ஒவ்வொரு அறையிலுமுள்ள மறியற்காரர் பூட்டப்பட்ட தமது அறைக் கதவருகில் வந்து தமது இலக்கத்தைக் கூறவேண்டும். அறைக்கதவில் ஒரு சிறிய துவாரம் மட்டுமே உண்டு. அதன் ஊடாக நாங்கள் கைதிகளுடன் கதைக்க முடியும்.



சற்று முன்பாக வந்த கைதிக்கு தன் இலக்கம்தெரியாததால் என்னிடமிருந்த டோச் லைட்டை அடித்து அவன் சட்டையில் தொங்கிய தகட்டிலிருந்த நம்பரைக் குறிக்கையில் அவன் என்னை அடையாளம் கண்டு "நீங்களா" என்றான் ஏதேதோ எல்லாம் கதைக்கும் ஆவலோடு.

"உன்பெயரென்ன" என்று அதிகாரத்தொனியிற் கேட்டேன். சிறை உத்தியோகத்தர்கள் எக்கைதியுடனும் அன்பாகப்பேசுவது குறைவு. அதுவும் தூக்குத் தண்டனைப் பகுதிக் கைதிகளுடன் அதிகம் கதைப்பதே சட்டத்திற்கு முரணனது.

"என் பெயர் அரசன்" என்றான் அக் கைதி.

"அரசன் எப்படியப்பா சிறைக் கைதியாக முடியும்." கிண்டலாகவே கேட்டேன்.

"அது பெரும் கதை." என்றான் அவன் பெருமூச்சோடு.

"ஏதும் சாப்பிட்டாயா?" என்றேன்.

"மதியமெல்லாம் காலைமு[illegible]தல் வெறும் [illegible]கள் என்றான்.

ஒரு தமிழ்க் கைதி என்பதாலும் அவன் தோற்றத்தில் நான் கண்ட தூய்மையாலும் அவன்மீது என்னையறியாமலே ஒரு தனிப்பரிவு எனக்கேற்பட்டது.

"திரும்பவும் இரவு 12 மணிக் கடமைக்கு வருகையில் உன்னைச் சந்திக்கிறேன்" என்றவாறு அவ்விடமிருந்து அகன்றேன்.

மறு கடமையின்போது சொன்னபடி அரசனின் கதவோரம் சென்றேன். அரசன் கதவின் வட்டமான துவாரத்தினூடாக என்னை எதிர்பார்த்தபடி அந்த நள்ளிரவிலும் காத்திருந்தான். பசியாலும் உறக்கமின்மையாலும் அவன் கொட்டாவி விடுவது எனக்குக் கேட்கிறது.

"உங்களுக்காகவே காத்திருக்கிறேன்" என்றான். என்னை அடையாளம் கண்டதும்,

"சரிசரி முதலில் இதைச் சாப்பிடு" என்று மறைத்துக் கொண்டு வந்த சீனிச்சம்பல் திணித்த நான்குதுண்டுப் பாணை இரகசியமாக அவனுக்குத் துவாரத்தின் ஊடாகக் கொடுத்தேன். அதைப்பெற்ற அவன் கரமிரண்டும் என் கரங்களை நன்றியுடன் பற்றியது.

" கொஞ்சமேனும் கருணை காட்டாதஉங்கள் குரல் இவ்வளவு கருணை உள்ளத்துக்குள்ளா இருக்கிறது.

பசியால்வாடும் கைதிக்கு நடுநிசியில் உணவு தருகிறீர்களே ஐயா நீங்கள் செய்வது கடமையா கருணையா!" என்றான். அவன் கண்ணீர் என் கரத்தை நனைக்கிறது.

"உங்களைப்போன்றவர்கள் என்தாயையும் தமிழையும் விடமேலானவர்கள்" என்று கூறியபடியே விம்மினன்.

"இருக்கட்டும் நீ சாப்பிடு பிறகு வருகிறன்." என்றவாறு நடக்கிறேன்.

என் காலணிகள் லயம் தவருது 'டக் டக்' என்று நிதானமாக ஒலிக்கிறது. அந்த ஓசை "உன் கடமையை நீ சரியாகச்செய்கிருயா"? என்று என்னைக்கேட்பது போலுள்ளது.

என் உள்ளத்திலே கேள்விகள் பிறக்கின்றன! அரசன் கொலைக்குற்றவாளியா இல்லையா? தாயையும் தமிழையும் பற்றிப்பேசுகிருனே! எந்தக் கொலைகாரனுக்கும் இந்த ஞானம் வராதே! இவ்வாறு சிந்தித்தவாறே நான் கடமை புரியும் பகுதியைப் பல தடவை சுற்றிவந்தேன். எல்லாக்கைதிகளும் உறங்கிக்கொண்டிருக்க அரசன் மட்டும் தன் அறையில் நிற்பதும் நடப்பதும் பெருமூச்சு விடுவதுமாக இருப்பது அந்த நள்ளிரவின அமைதியில் துல்லியமாய்க் கேட்கிறது.

"அரசன்"

கனிவு ததும்பிய குரலில் மிக மெதுவாக அவனை அழைக்கிறேன், அவனும் பதிலுக்கு

"ஐயா" என்ருன். ஏனே எம்மிடையே இனம்புரியாத பாச உணர்வு.

"உன்னை எதற்காக இங்கு கொண்டுவந்திருக்கிருர்கள்?"

அவன் என்ன குற்றம் செய்தான் என்பதை அறியும் நோக்கோடு கேட்கிறேன். அவனும் சிறைச் சூழ்நிலையை உணர்ந்தவனுய் எவருக்கும் கேட்காத ரகசியக் குரலில் சுருக்கமாகவே விஷயத்தை எடுத்துரைத்தான்.

"தமிழர்கள் இந்நாட்டில் இரண்டாந்தரப் பிரஜைகளாய் உரிமையற்று சிங்கள அரசின் அடிமைகளாக வாழ்ந்து மடிவதிலும் தம் உரிமைக்கும் மொழிக்குப் தமிழ்மண் காக்கவும் போரிட்டு மடிவதே வீரம். பிறந்த மண்ணுக்கு பெருமை அளிப்பது அதுவே. வெளிப்பகையை கொல்லுமுன் உட்பகையை கொல்வோம் நம் இனத்தின் புல்லுருவிகளாய் விளங்குப காட்டிக்கொடுக்கும் கயவர்களான எட்டப்பன் கூட்டத்தினரை அழிக்கப் புறப்படுவோம் வீரர்களே! தமிழரை இல்லாத நாடே இல்லை ஆனல் தமிழர்களுக்கு என்ருரு நாடு உலகில் இல்லை எமக்கொரு தாயகம் எமக்கொரு தனி ஆட்சி. இதுவே எமக்கு முதலில் தேவை. இதை உணராமல் உறங்கிக் கிடப்பவர்களை தட்டி எழுப்புங்கள் தமிழ் மொழிக்காக தமிழ்த் திரு நாட்டுக்காக தமிழ்ப்பசும் அனைவரும் ஒன்றுபடவேண்டும் எனை இடர்வரினும் எவ்வளவு தான் அழிவு ஏற்படினும் நம்மை நாமே ஆளும் காலம் வரும்வரை ஒன்றுபட்டு நின்று போராடுவோம்" என்று ஒரு கூட்டத்தில் பேசியதற்காக மேடையை விட்டு இறங்குகையில் கைதுசெய்தவர்கள; மூன்று மாத காலமாக வளககமறியறசாலையில் வைத்திருந்தார்கள். பல நாள் விசாரணை செய்தார்கள். பயமுறுத்தினர்கள். எதற்குமே நான் அஞ்சவில்லை. மாருக "நீங்கள் என்னை எவ்விதத்தில் துன்புறுத்தினலும் சரி என் வழியலிருந்துவிலகேன்; சொன்னவற்றை வாபஸ் பெறவும் மாட்டேன். போர்முறை ஒன்றுதான் எம் துன்பத்தைப போக்கும். உடலோடு பிறந்த உயிர் உடலைவிட்டு ஒரு நாள் பிரியலாம். அது அடிமைப்பட்டு நூருண்டு வாழ்வதிலும் ஒரு நாளேனும் சுதந்திரமாய் வாழ்ந்து வீர மரணம் அடைவதே மேல் என்று கூறியதால் எனை இங்குகொண்டுவந்து அடைத்திருக்கிருர்கள் போலிருக்கிறது" என்ருன் அவன்.

"உன்னை இங்கு தூக்குத் தண்டனை கைதிகளுடன் சேர்த்திருப்பதிலிருந்து நீ எவ்வளவு பயங்கரவாதியாய் கணிக்கப்பட்டுள்ளாய் என்பது புரிகிறது. உனக்கு என்னுலான உதவியின சந்தர்ப்பம் கிட்டுகையில் செய்கிறேன். சாதாரண மறறக் கைதிகளுக்கு வாரம் ஒரு தடவையாவது கடிதம் எழுத அனுமதிப்பார்கள். வரும் கடிதங்களையும் பார்க்கக்கொடுப்பார்கள். ஆனல் உன போன்ற கைதிகளுக்கு உலகத்தொடர்பு கிட்ட அனுமதிக்கமாட்டார்கள். ஒரு நளில் மத்தியானம் ஒரு மணி நேரம் மாலையில் ஒரு மணிநேரம் என அன்ருட உடற் கடமை

**கனகதுர்க்கா**

—7-ம் பக்கம் பார்க்க

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# தமிழினத்தின் புராதன கலைப் பொக்கிஷங்களை சிங்கள அரசிடம் ஒப்படையாதீர்!

## அந்நிய நாடுகளுக்கு ஆனந்தசங்கரி வேண்டுகோள்!

"தமிழ் பகுதிகளில் அரசோச்சிய — சங்கிலியன் — பண்டாரவன்னியன் காலத்தில் — ஒல்லாந்தர் — ஆங்கிலேயரால் எடுத்துச்சென்ற —புராதன காலத்து தமிழ் இனத்தின் தேசிய செல்வங்களை — இனவெறி பிடித்த— பௌத்த சிங்கள ஏகாதிபத்திய அரசிடம் சம்பந்தப்பட்ட நாடுகள் ஒப்படைக்கும் பட்சத்தில்— இன்றைய ஆட்சியினர் — அவைகளை அழித்தொழிப்பார்களே தவிர, காப்பாற்ற மாட்டார்கள். எனவே தமிழ் மக்களின் நன்மை கருதி இத் தேசிய கலைச்செல்வங்களை அவர்கள் ஒப்படைத்தல் கூடாது."

இவ்வாறு சிறைசென்று மீண்ட தமக்கும் — ஏனைய இளைஞர்களுக்கும் பூனகரி மக்களால் அளிக்கப்பட்ட வரவேற்புக்கு நன்றி தெரிவித்துப்பேசிய திரு. வீ. ஆனந்தசங்கரி மேற்கண்டவாறு உருக்கமான வேண்டுகோள் ஒன்றை சம்பந்தப்பட்ட நாடுகளுக்கு விடுத்தார். அவர் தொடர்ந்து பேசியதாவது:-

உதாரணமாக இலண்டன் மாநகரில் உள்ள நூதன சாலையில் — இளங்கோ அடிகள் தந்த சிலப்பதிகாரத்தின் நாயகியும்—கற்புக்கரசி என்று தமிழ் மக்களால் போற்றப்படும்— பத்தினித் தெய்வமுமான கண்ணகியின், பிரமாண்டமான சிலை அங்கே காட்சி தருகிறது: இது தமிழ் மக்களின் தேசிய செல்வங்களில் ஒன்று இவைகளை இந்நாடுகள் தமிழ் மக்களின் நன்மை கருதி—வெறி பிடித்த — இனத்துவேசம் கொண்ட இந்த அரசிடம் ஒப்படையாது — அவர்கள் பாதுகாக்கவேண்டும்; தமிழ் ஈழம் அமைந்த பின்னர் அவற்றை எங்களிடம் ஒப்படைக்கவேண்டும்"

# கிழக்கில் நடைபெற்ற உண்ணாவிரதங்கள்

கொடுஞ் சிறையில் வாடும் இளைஞர் விடுதலைக்கும், தமிழ்ஈழப் பணிக்கு தங்களை தயார் செய்யவும். ஆகஸ்ட் 29,30ம் திகதிகளில் கிழக்கிலுள்ள 6 தொகுதிகளில் பதினொரு உண்ணாவிரதங்கள் நடைபெற்றன. இவ் உண்ணாவிரதங்களில் 100க்கு மேற்பட்ட சிறுவர், சிறுமியர், ஆண்கள், பெண்கள் கலந்துகொண்டு சிறப்பித்தார்கள்.

**29 - 8 - 76**

**கல்குடாத் தொகுதி:** கிரான் பிள்ளையார் கோவில் திருமதி பொ. மாணிக்கவாசகர் (காலஞ்சென்ற பா. உ. மனைவி) ஆரம்பிக்க திருமதி கலாதம்பிமுத்து (மகளிர் பேரவை செயலாளர்) முடித்துவைத்தார்.

**மட்டக்களப்பு தொகுதி:** ஏரூவூர் 4ம் குறிச்சி பிள்ளையார் கோவில் முன்றலில் திருமதி இராஜம் இராசதுரை ஆரம்பிக்க திரு. ப. யோசேப் முடித்து வைத்தார். மாமாங்க பிள்ளையார் கோவில் முன்றலில் திருமதி கலாதம்பிமுத்து (மகளிர் பேரவை செயலாளர்) ஆரம்பிக்க திரு. செ. இராசதுரை (பா. உ.) முடித்துவைத்தார். ஆரையம்பதி செல்வா நகர் சிவன் கோவில் முன்றலில் திரு. மு. மாணிக்சம் ஆரம்பிக்க திரு. செ. இராசதுரை (பா. உ.) முடித்துவைத்தார்.

**பட்டிருப்பு தொகுதி:** களுவாஞ்சிக்குடி பிள்ளையார் கோவில் முன்றலில் திருமதி லீலா இராசமாணிக்கம் ஆரம்பிக்க திரு. மு. மாணிக்கம் முடித்துவைத்தார்.

**கல்முனை தொகுதி:** அம்பலத்தடி பிள்ளையார் கோவில் முன்றலில் திரு. பொ. வி. கந்தையா ஆரம்பிக்க ஜனாப் உதுமாலெப்பை முடித்து வைத்தார்.

**சம்மாந்துறை தொகுதி:** வீரமுனை பிள்ளையார் கோவில் முன்றலில் ஜனாப் உதுமாலெப்பை ஆரம்பிக்க திரு. ஆ. வேல்முருகு முடித்து வைத்தார்.

**பொத்துவில் தொகுதி:** காரைதீவு கண்ணகி ஆலய முன்றலில் திரு. சிவஞானசெல்வம் குருக்கள் ஆரம்பிக்க சட்டத்தரணி திரு. சாம் தம்பிமுத்து முடித்து வைத்தார். பொத்துவில் ஆலையடி பிள்ளையார் கோவில் முன்றலில் திரு. ச. நல்லதம்பி ஆரம்பிக்க திரு. க. சிந்தாத்துரை முடித்து

—8-ம் பக்கம் பார்க்க

# மாற்றுத் திட்டமாக இருந்த 'தனி நாடு'...

—8-ம் பக்கத் தொடர்

10ம் நாள தமிழர் விடுதலைக் கூட்டணி முடிவு எடுத்தது.

"எங்கள் போராட்டம் அஹிம்சைப் போராட்டம், நாங்கள் குறிப்பிட்ட சில சட்டங்களைத் தேர்ந்தெடுத்து அவற்றை மீறுவோம்" என்றார் திரு. அமிர்தலிங்கம். மே 22ம் நாள் அரசியல் சட்டத்துக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட சட்டமறுப்பு ஓர் அடையாள சட்டமறுப்பேயாகும். குற்றம் சாட்டப்பட்ட 4 தலைவர்களின் சார்பிலும் 67 சட்டத்தரணிகள் இலவசமாக ஆஜராகி வாதாடியது குறிப்பிடத்தக்கது.

### தீவிரதனைத நாடும் இளைஞர்

பழையதலைமுறை அஹிம்சையையும் சத்தியாக்கிரக முறைகளையும் பின்பற்றுகிறார்கள் என்பது உண்மைதான்; ஆனால் வளர்ந்துவரும் தலைமுறையினரின் மனப்பான்மை என்ன?

"இளைஞர்களில் ஒரு பகுதியினர் பலாத்காரத்தையே விரும்புகின்றனர். நாம்மெதுவாகச்செல்வதாகவும் தீவிர நடவடிக்கைகள் வேண்டுமென்பதும் இளைஞர்களின் கருத்தாகவிருக்கிறது. ஒரு பகுதி இளைஞர்கள தனியே பிரிந்து ஈழத்தமிழ் விடுதலை இயக்கம் எனும் பெயரில் இயங்கிவருகின்றனர். இவர்களில் பலர் சிறையில் இருக்கின்றனர். அண்மையில் இடம்பெற்ற வங்கிக் கொள்ளை தொடர்பாக சந்தேகத்தின்பேரில் கைது செய்யப்பட்டுள்ளனர்" என்று திரு. அமிர்தலிங்கம் இளைஞர் நிலைபற்றி விளக்கியபோது குறிப்பிட்டார்.

கடந்த ஆண்டு காந்தி ஜெயந்தியின்போது தமிழர் விடுதலைக்கூட்டணி சிறையிலிருக்கும் தமிழ் இளைஞர் குடும்ப நிதிக்காக ரூபா 40,000 சேகரித்துள்ளனர்.

தமிழர்களின் போராட்டத்தைக் காரணம் காட்டி 1977மே திங்களில் நடைபெற வேண்டிய பொதுத் தேர்தலை ஒத்திப்போடுவதற்கு திருமதி பண்டாரநாயகா முயற்சிப்பாராயின் தென்னிலங்கையில் ஐக்கிய தேசியக்கட்சியும், லங்கா சமசமாஜக் கட்சியும் அதை எதிர்த்துப்போராடத் தயா தயாராக இருக்கின்றன.

### பேச்சுவார்த்தைககு இடம் உண்டா?

1977ம் ஆண்டு பொதுத் தேர்தலின் பின்னர் ஏற்படக்கூடிய ஆட்சிமாற்றம் தமிழர்களுக்கு பயன்படக் கூடியதாக இருக்குமா? இது பற்றி திரு. அமிர்தலிங்கத்திடம் கேட்டபோது — "ஐக்கிய தேசியக் கட்சியுடன் எமக்குள்ள அனுபவமும் சசப்பானதுதான்" என்று தெரிவித்தார் "நாங்கள் எல்லாச் சிங்களக்கட்சிகளுடனும் வேலை செய்துபார்த்துவிட்டோம்; அக்கட்சிகள் எதுவும் தமிழர் கோரிக்கைகளை ஏற்காது என்பதையும் புரிந்துகொண்டுவிட்டோம்" என்று திரு. அமிர்தலிங்கம் தெரிவித்தார்.

அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தைகளுக்கு இனி இடமேயில்லையென்று திரு. அமிர்தலிங்கம் கருதுகிறாரா? "நாங்கள் எப்போதுமே கதவைச் சாத்தமாட்டோம்; ஆனால் எமது அடிப்படைக் கருத்து (தனிநாடு ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும்" என்றார் அவர்.

### செல்வா எமது ஆத்மீகத் தலைவரே!

இதன்பின்னர் திரு. அமிர்தலிங்கத்தின் பேஜட் காரில் சென்று தமிழர்விடுதலைக் கூட்டணியின் மற்றோர் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினரும் சட்டத்தரணியுமான திரு. சி. கதிரவேற்பிள்ளையைச் சந்தித்தேன்.

"திரு. செல்வநாயகம் அவர்களை எங்கள் ஆத்மீகத் தலைவராக — இயக்கத்தின் அடையாளமாக நாம் கருதுகிறோம்" என்று திரு. கதிரவேற்பிள்ளை தெரிவித்தார். அரசாங்கத்தின் தொழில் முதலீடுகள் வடக்கு கிழக்கு மாகாணங்களில் ஆக இரசாயனம், சீமெந்து, சீனி, காகிதம் ஆகியவற்றுக்கு மட்டுமே மட்டுப்படுத்தப்பட்டிருப்பதாக அவர் மேலும் கூறினார். தமிழ் ஈழத்தில், தமிழ் வர்த்தகர்கள் தங்கள் முதலீடுகளை போடாது கொழும்பில் போடுவதேன என்ற கேள்விக்கு "இன்றைய ஆட்சி அமைப்பில் ஏற்றுமதி இறக்குமதிக்கு வசதியான இடமாக கொழும்பையே ஆட்சியாளர்கள் வைத்திருப்பது தான்." என்று அவர் பதிலளித்தார்.

### தமிழ் ஈழததின் பொருளாதார வளம்

தமிழ் ஈழத்துக்கு பொருளாதார வளம் உண்டா? இக்கேள்விக்கு திரு. கதிரவேற்பிள்ளை பின்வருமாறு பதிலளித்தார்:—

"இலங்கையில் எல்லாமாக 1,320,000 ஏக்கர் நெல் வயலுண்டு; இதில் 432,000 ஏக்கர் நெற்காணி வடக்கு கிழக்கு மாகாணங்களில் தான் உண்டு. இங்கு விளைகின்ற நெல் 126 இலட்சம் மக்களுக்கு உணவாகின்றது. ஆனால் தமிழ் ஈழத்தின் தற்போதைய மக்கள் தொகை ஆக 16 இலட்சம் மட்டும் தான்! ஆகவே வெளிநாடுகளுக்கு அரிசி ஏற்றுமதி செய்யவும் எம்மால் முடியும்" என்றார் திரு. கதிரவேற்பிள்ளை. திருகோணமலையை அபிவிருத்திசெய்து அதை ஒரு "சிங்கப்பூர்" ஆக்குவதற்கான திட்டங்களும் கூட்டணியிடம் உண்டு என்றும். அவர் மேலும் தெரிவித்தார்.

# எங்கிருந்தாலும் தமிழுக்கு....

—6-ம் பக்கத் தொடர்

யை செய்யவும் காற்றுடவும் அனுமதிப்பார்கள். உனது இலட்சிய பயணத்திற்கு என்னாலான உதவியினைச் செய்ய அவாவுறுகிறேன் — நானும் ஓர் தமிழ் மகனாய் இருப்பதால் உனக்கு வேண்டியவர்க்கு கடிதம் எழுதவும் அவர்கள் உனக்கிடும் கடிதங்களை எனது விலாசத்திற்கு அனுப்பச் செய்தாயானால் அவற்றை கொணர்ந்தும் தருகிறேன்" என்றேன்.

"ஐயா! தாங்கள் செய்ய இருக்கும் இந்த உதவிக்கு நான் என்ன கைமாறு செய்வேன். சிறையிலும் என் பணி தொடர தாங்கள் உதவ முன்வந்தமைக்காக தங்களுக்கு ஈழத் தமிழகம்என்றும் நன்றி கூறும் என்றான்.

நான் என் கடமையைத் தொடர்கிறேன். சிறைச்சாலைக்குள் எங்களுக்கு பரிசோதனை உண்டு. எங்கள் கடமைக்குத் துரோகம் செய்வதை அவர்கள் பரிசோதனையின்போது கண்டு பிடித்தால் எங்கள் வேலை கூடப் பறிபோய்விடும் இதை நன்கு தெரிந்தும் நான் அரசனுக்கு உதவ நினைத்தேன். தமிழனுக்கு உத்தியோகம் அடிமை இலட்சணமாகிவிட்டது. சட்டத்திற்குக் கட்டுப்பட்டு கடமை செய்யும் தமிழன் சட்டத்திற்காகத் தமிழ்த் துரோகியாய் வாழ்வதிலும் தமிழுக்காக தன் அரச கடமைக்கு துரோகியாக வாழ்வதே மேல். அதுவே தமிழுக்கு அவன் ஆற்றும் தொண்டு "என்று எங்கோ படித்தஞாபகம்நினைவில் வந்தது. இந்த அடிமை உத்தியோகத்தைவிட என்மனச்சாட்சியின் குரலே பெரிது. நான் செய்தது கடமைக்குத் துரோகமானாலும் அநீதியான இந்த அரசுக்கு துணை நிற்கக்கூடாது. முள்ளை முள்ளால்தான் எடுக்கவேண்டும் என்று துணிந்து அரசனுக்கு பலபேப்பர்கள் ஒரு பேனா இருமெழுகுவர்த்தி ஒரு தீப்பெட்டி ஆகியன கொடுத்தேன்.

தமிழ் அன்னையின் அடிமை விலங்கை உடைத்தெறிய அரசன் அன்றிலிருந்து தன் எழுத்தால் பாடுபட்டான். அரசனின் கடிதங்கள் யாவும் என் மூலமாக உரியவர்களுக்குபோய்ச்சேர்ந்ததும் சம்பந்தப்பட்டவர்கள் நேரிலும் வந்து என்னிடம் அரசனுக்கு செய்தி தெரிவிக்கச் சொன்னார்கள் நானும் என்னாலானதை செய்தேன். கடமைக்குச்செய்யும் துரோகம் தமிழ் இனத்துக்கு அதன் விடிவுக்கு உதவுமானால் அதற்காக என் உயிரையும் இழக்கச் சித்தமானேன். அதுவே எனக்கு உயர் தொண்டாகத் தெரிந்தது.

சிறைச்சாலையில் இருந்தபடியே அரசன் தன் கொள்கைகளை போராட்ட முறைகளை என் மூலமாக வெளியே பரப்பினான். நாளடைவில் அரசனின் நிலை உலகநாடுகளின் கவனத்திற்கு அவன் இயக்கத்தைச் சேர்ந்தவர்களால் கொண்டுவரப்பட்டது. உலகநாடுகள் அவன் நலனில் அக்கறை கொண்டு அவனையும் அவன் இயக்கத்தைச் சேர்ந்தவர்களையும் விடுதலைசெய்யக் கோரியது. இதனால் சட்ட மாஅதிபர் இப்பிரச்சினைக்கு தீர்வுகாண வேண்டிய கட்டாயத்திற்கு உள்ளானார். அதன் பலன் அரசன் என்ற சுதந்திரப் புறா இரண்டு வருடங்களின் பின் போகம்பரை என்ற சிறை அரக்கனின் வாய் திறந்ததும் வெளியே பறந்தது.

அரசனை வரவேற்க வந்த கூட்டத்தினரிடையே அரசன் முதலிற் பேசினான் நான் சிறைச்சாலையுள் நின்றபடியே அவன் பேச்சைக் கேட்கிறேன்.

"எந்நிலையிலும் எங்கிருந்தாலும் தமிழுக்குத் தொண்டாற்றும் தமிழ்த்தியாகிகள் என்றும் கௌரவிக்கப்பட வேண்டியவர்களே."

சிலேடையான அவன் பேச்சின் அர்த்தம் எனக்கு நன்கு புரிகிறது. நான் செய்த உதவிக்கு—என்னைச் சந்திக்க முடியாது போயினும்—கூடி நின்றோர் மத்தியில் என்னையும் ஒரு பொருட்டாக மதித்து மறைமுகமாக அவன் நன்றி கூறுகிறான். அந்த நன்றிகலந்த தியாகக் குரலைக்கேட்டு என் நெஞ்சம் பெருமிதத்தால் விம்மியது. கண்களும் குளமாயின.

(யாவும் கற்பனையல்ல

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலைமைத் தபால் நிலையத்தில் செய்திப் பத்திரிகையாகப் பதிவுசெய்யப்பட்டது.

## கிழக்கில் நடைபெற்ற..

—7-ம் பக்கத் தொடர்

வைத்தார். அக்கரைபற்று மாணிக்க பிள்ளையார் கோவில் முன்றலில் திரு. எஸ். மயில்வாகனம் (அக்கரைப்பற்று கிளை தலைவர்) ஆரம்பிக்க திரு. பி. கே ஜெயசிங்கம் முடித்துவைத்தார்.

### மகளிர் உண்ணாவிரதம்

**மட்டக்களப்பு:** அரசடி பிள்ளையார் கோவில் முன்றலில் திரு. மு. மாணிக்கம் ஆரம்பிக்க திரு. செ. இராசதுரை (பா. உ.) முடித்து வைத்தார்.

**கல்முனை!** பாண்டிருப்பு திரௌபதை ஆலயம் முன்றலில் திரு. செ. இராசதுரை (பா. உ.) ஆரம்பிச்க திருமதி சுகுணம் யோசப் முடித்து வைத்தார்.

இது இவ்வாறிருக்க மட்டக்களப்பில் மாட்டுவண்டி வைத்து பிழைப்பு நடத்துவோர் 27-8-76ல் அரசடி பிள்ளையார் ஆலய முன்றலில் காலை 6 முதல் மாலை 6 வரை உண்ணாவிரதமிருந்தனர்.

— உதயக்கனி

## செத்தவர்கள் ....

—1-ம் பக்கத் தொடர்

மோப்சி ஜெயவர்த்தன, திருமதி விரோனிக்கா திசரா, திருமதி கிறேஸ் டீ அல்விஸ் ஆகிய மூன்று பெண்களின் மரண அறிவித்தல் வெளியிடப்பட்டிருந்தது. அதே தினத்தில் மாலை வெளிவந்த சிலோன் ஒப்சேவரில் முன் பக்கத்தில், குறிப்பிட்ட (இறந்துவிட்டதாகச் சொல்லப்பட்ட) மூன்று பெண்களும் பிரதமர் திருமதி பண்டாரநாயகாவை உச்சியில் வைத்து வானளாவப் புகழ்ந்து அளித்த பேட்டி வெளியிடப்பட்டிருந்தது.

இந்த விஷயம் லேக்ஹவுசை ஒரு கலக்குகலக்கி விட்டிருக்கிறது. இறந்ததாகச் சொல்லப்பட்டவர்கள் பேட்டியளித்தது எப்படி? திருமதி பண்டாரநாயகாவை அவமதிப்பதற்கு லேக்ஹவுசுக்குள்ளேயே திட்டமிட்டு செய்யப்பட்ட சதியா இது என்ற கேள்விகள் பரவலாக எழுந்துள்ளன. லேக்ஹவுஸ் நிர்வாகம் இதுபற்றி இப்போது விசாரணை நடத்திவருகிறது.

## காற்றில் பறந்...

—1-ம் பக்கத் தொடர்

சிறைகளுக்கு மாற்றி, அவர்களை அங்கு தனிமைப்படுத்தி கொடுமைப்படுத்திய போதிலும் அவர்கள் சளைக்காமல் சத்தியப்போரில் ஈடுபட்டிருந்ததுகண்டு செய்வதறியாது திகைத்த சிறை ஆணையாளர், மீண்டும் அவர்களை வெலிக்கடை சிறையில் ஒன்றுகச் சேர்த்து அவர்களிடம் பின்வருமாறு வாக்குறுதியளித்திருந்தாராம்.

"உங்கள் நிலைமையையும், உங்கள் கோரிக்கையையும் பிரதமரிடம் எடுத்துக் கூறினேன். தாம் இப்போது கூட்டுச்சேரா மாநாட்டில் மூழ்கியிருப்பதாகவும், மாநாடு முடிவடைந்ததும் நிச்சயமாக உங்களது பிரச்சினைகளைத் தீர்த்துவைக்க நடவடிக்கை யெடுப்பதாகவும், இதை உங்களிடம் தெரிவிக்கும்படியும் கூறியிருக்கிறார். நூற்றுக்கு தொண்ணூற்றென்பது வீதம் நீங்கள் விடுதலை செய்யப்படுவது நிச்சயம். ஆகவே உண்ணாவிரதத்தை கைவிடுங்கள்!" என்றுகூறி அழமாட்டாக் குறையாக கெஞ்சினாராம்.

இதையடுத்துத்தான் உண்ணாவிரதமிருந்த இளைஞர்கள், பிரதமர் தமது வாசகுறுதியை நிறைவேற்றுவதற்கு ஆகஸ்ட் 30 வரை காலக்கெடு கொடுத்து — நீராகாரம் அருந்த ஒப்புக் கொண்டார்கள். ஆனால் சிறை ஆணையாளர்கொடுத்த வாக்குறுதியின்படி கூட்டுசேரா மாநாடு முடிந்தும்,இதுவரை எவரும் விடுதலை செய்யப்படவில்லை. இதுபற்றி சம்பந்தப்பட்ட இளைஞர்கள் ஆணையாளரிடம் கேட்டபோது, 'நான் என்ன செய்வது' என்ற பாவனையில் மறுமொழி எதுவும் சொல்லாமலிருந்தாராம்.

கொடுத்த உறுதிமொழிப்படி இளைஞர்கள் விடுதலை செய்யப்படாததையடுத்து தமிழ் ஈழமெங்கும் அவர்களை விடுதலை செய்யக் கோரும் இயக்கத்தை தீவிரப்படுத்த தமிழ் இளைஞர் பேரவை ஆலோசித்து வருகிறது. இதற்கான சில திட்டங்கள் கடந்த ஞாயிறன்று தமிழர் விடுதலைக் கூட்டணி அலுவலகத்தில் நடைபெற்ற பேரவையின் மத்தியசெயற்குழுக் கூட்டத்தில் எடுக்கப் பட்டபோதிலும் கூட்டணிச் செயல் அதிபர்களின் ஒப்புதலுக்காக அவை இப்போது சமர்ப்பிக்கப்பட்டிருக்கின்றனவாம்.

## 7 இளைஞர்களு...

—1-ம் பக்கத் தொடர்

யோர் மீது சதிக்குற்றமும் சுமத்தப்படவிருக்கிறது. இவர்களிடம் 7ம் திகதி குற்றப்பத்திரிகை கையளிக்கப் படவிருக்கிறது.

இவ்வழக்கில் சந்தேக நபர்கள் என்று கருதப்படும் மூவர் இதுவரை கைதுசெய்யப்படாததால் அவர்களின்றியே அவர்கள்மீது விசாரணை நடைபெறுமாம்.

இவ்வழக்கில் தமிழர் விடுதலைக் கூட்டணியின் சிரேட்ட சட்டத்தரணிகள் எதிரிகள் சார்பில் ஆஜராகவிருக்கின்றனர். சர்வதேச மன்னிப்புச் சபையின் சார்பில், இங்கிலாந்திலிருந்து பார்வையாளர் ஒருவரும் அனுப்பப்பட விருப்பதாகத் தெரியவருகிறது.


செல்லமகால் 3-வது வாரம்
இப்பொழுது காட்சியளிக்கிறது
சிவாஜி மஞ்சுளா, நாகேஷ்
வி. கே. ராமசாமி, தங்கவேலு நடித்த
அன்பே ஆருயிரே
(ஈஸ்ட்மன் கலர்)
திரைக் கதை—டைரக்ஷன் ஏ. சி. திருலோகசந்தர் M. A.

றீகல் (மட்டுநகர்) காட்சியளிக்கிறது
தேங்காய் சீனிவாசன், சுபா, தங்கவேலு, சோ, மனோரமா நடித்த—
உங்க வீட்டு கல்யாணம்

காட்சியளிக்கிறது
கெயிட்டி
ரவிச்சந்திரன், டி. எஸ். பாலையா, சந்திரபாபு. பாரதி நடித்த—
வாலிப விருந்து

கெப்பிட்டல் 5வது வாரம்
ஜெய்சங்கர், பி. பானுமதி, நிர்மலா,
சுந்தரராஜன் மற்றும பலர் நடித்த-
எடுப்பார் கை பிள்ளை
(ஈஸ்ட்மன் கலர்)

வெலிங்டன் 4வது வாரம்
(யாழ்நகர்)
சிவகுமார் 'ஜெயசித்ரா நடித்த
தங்கத்திலே வைரம்

4வது வாரம்
பிளாசா
சிவாஜி கே. ஆர். விஜயா
ஸ்ரீகாந்த், பிரமிளா, வி.கே.ராமசாமி,
மேஜர் சுந்தரராஜன், மனோரமா, சோ
— நடித்த —
தங்கப் பதக்கம்
(ஈஸ்மன் கலர்)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை சிலோன் நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் கொழும்பு-12 பண்டாரநாயகா வீதி, 194 ஏ. இலக்கத்தில் 1976-ம் வருடம் செப்டம்பர் மாதம் 5-ந் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டு பிரசுரிக்கப்பட்டுள்ளது.